சிலம்பு ௫௪	திருவள்ளுவர் ஆண்டு க௯௯க, தை பிப்ரவரி, 1960	பரல் ௬

திரு. தி. வை. சதாசிவபண்டாரத்தாரவர்கள்

கடவுள் திருவடி எய்துதல்

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய ஆராய்ச்சிப் பேரறிஞர் பண்டாரத்தாரவர்கள் 2-1-1960இல் கடவுட்கழலிணை எய்தினர். அக்குறிப்புச் சென்ற 'செல்வி'யில் வெளியிடப்பட்டுள்ளது. அவர்தம் விரிவான வரலாறு இச்செல்வியின் (உ௭௫) பக்கத்தில் காணலாம். இவர்தம் இழப்பு ஈடுசெய்யவொண்ணாப் பேரிழப்பே என்பதில் எவர்க்கும் யாண்டும் எட்டுணையும் ஐயமில் மெய்ம்மையேயாம். யாங்களும் நனிமிக வருந்துகின்றோம். அவர்தம் பிரிவால் ஆற்றொணா வருத்தங்கொள்ளும் பெருந்தகையின் குடும்பத்தார்க்கு எங்கள் பரிவும் ஆறுதலுரையும் உரியவாகுக. நம் ஆராய்ச்சிப் பேராசிரியப் பேரறிஞரவர்கள் தம் பெருந் தமிழ்ப் புலமையினையும், கல்வெட்டாராய்ச்சித் துறையின் நுண்திறலினையும் ஒவா உழைப்பினாலும் பெரும் புலவர்களின் கூட்டுறவாலும் தாமே நிரப்பிக்கொண்டமை நனி மிகப் பாராட்டற்குரியதும் ஏனையார் கைக்கொண்டொழுகற்காம் வழிகாட்டியாய் இலங்கற்குரியதுமாகும். அம்மட்டுமன்று; 'செந்தமிழ், தமிழ்ப்பொழில்' போன்ற அரிய திங்கள் வெளியீடுகளில் இடையறாது எழுதி வெளிப்படுத்திய ஏற்றஞ்சால் திட்பநுட்பச் செறிவுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளால் அவர்கள் நிலையுயர்ந்தன. உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியராக விளங்கினர். "முதற் குலோத்துங்கசோழன் வரலாறு, பாண்டியர் வரலாறு" முதலியவைகளை நடுநிலைவழாது தக்க அகப்புறச் சான்றுகளுடன் வரைந்து அச்சிட்டுப் பலமுறை வெளிப்படுத்தினர். 'அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்' ஆராய்ச்சித் துறை

யில் அரும்பேராராய்ச்சிப் பணியும் புரிந்தனர். 'பிற்காலச் சோழர் வரலாறு' ஒன்றிரண்டு பகுதிகளை ஒண்மையுடன் வெளிப்படுத்துலகுக் களித்தனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வுத்திணைக்கள வாயிலாக வெளிப்போந்த 'தமிழிலக்கிய வரலாறு' மிகமிக நுண்மை வாய்ந்த தொன்றாகும். கி. பி. 300—600 காலங்கள் தமிழிலக்கியத்தின் இருண்டகாலப் பகுதியென்று எல்லாராலும் ஒதுக்கப்பட்டதாகும். அக்காலத்தினை நம் பேராசிரியரவர்கள் நுண்ணிதின் ஆய்ந்து வெளிப்பட வரைந்தமை தமிழுலகுக்கொரு புத்தமிழ்தப் பெருவிருந்தாகும். அந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக இருமுறை வெளிவந்துள்ளது. "பிற்காலச் சோழர் வரலாறு" அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வுத் துறையில் முடியுநிலையில் எழுதி யமைத்துள்ளார்கள். முற்றுப் பெறாத நிலையில் சோழர் அரசியலிருக்கின்றது நம் பேராசிரியரவர்களின் அருந்தொண்டினைப் பெருவிருப்புடன் பாராட்டிக் கழகங்கள், மன்றங்கள் வழங்கியுள்ள பட்டங்களும், பொன்னாடை முதலிய பரிசுகளும் பலவாம். தொன்மைவாய்ந்த நம் தென்றமிழ் நாட்டின் தனிப்பெரும் வரலாறுகள் பெரும்பாலும் கல்வெட்டுத் துணைகொண்டே அமைக்கவேண்டியனவாயிருக்கின்றன. சங்கத்தொகைநூல்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் வரலாற்றுக்கு வேண்டிய சிற்சில குறிப்புக்களே காணப்படும். அவைகளும் கல்வெட்டாராய்ச்சியின் துணைகொண்டே துணிவுபெறத்தக்கனவாயுள்ளன.

இத்தகைய இன்றியமையாது வேண்டத்தக்க சிறந்த ஆராய்ச்சித் துறைக்குச் "சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும்" தனித்தொகுதி யமைத்து மாணவர்களுக்குப் பாடம் பயிற்றிப் பட்டமும் வழங்குதல் வேண்டும். தமிழ் மாநில அரசியலாரும் படி எடுக்கவேண்டிய கல்வெட்டுக்களைத் தக்கார் பலரைக்கொண்டு படியெடுப்பித்தும், முன்னமே படி எடுத்து வெளிப்படுத்தாமலிருப்பனவற்றை வெளிப்படுத்தியும், வெளிப்படுத்திய நூல்கள மீட்டும் அச்சிடவேண்டியதிருந்தால் அச்சிடுவித்தும், தமிழக வரலாற்றினை ஓம்புதல் வேண்டும். தமிழகத்துத் திருக்கோவில்களில் கல்லெழுத்தில்லாத பழங்கோவில்களே கிடையா. அவைகளே வரலாற்றுக் கருவூலங்களாகும். அவைகளைப் படியெடுத்து அச்சிட்டுவெளியிட வேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும். அதற்குத் துணைபுரிந்தால் நாம் நம் பேராசிரியர் பண்டாரத்தாரவர்களுக்குச் செய்யவேண்டிய நன்றியுங் கடப்பாடும் புரிந்தவர்களாவோம். அவர்தம் இன்னுயிர் இறை நிறைவில் என்றும் இன்புறுமாக!

---

* "பெண்ணினத்திற்கொரு நல்லுரை"

காணாவுலகவாசியெனக் கட்டுரை வரைய விருப்புற்று வரும் குழுவிலே, திருவரங்க நீலாம்பிகையென நம் பூவுலகின்கண் வாழ்ந்து உயிர்நீத்த பெண்மகள், முன் என் தம்பி, திரு இரா. ந. கு. வழி. எம்முலகுவாழ் ஆவிகள் இயக்குநரெனப் பெயரிட்டு வருபவர்வழி, முன் "பெண்ணின் பெருமை" யென்ற தலைப்பிட்டு வரைந்த கட்டுரையில், பெண்ணிடம் காணுங் குறைகளை அடுத்து வெளியிட விரும்புவேனென் றுரைத்ததைச் செந்தமிழ்ச் செல்வி ஆசிரியரவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, வரையத் திருவினை வேண்டி என்னியக்குநர் வழி வரைவதே இக்கட்டுரை.

பெண்ணின் பெருமை யென்று வரைந்த பெண்ணே, பெண்ணின் சிறுமை யென்ற தலைப்பிலல்லவா கட்டுரை வரைதல் திறன். அவ்வாறின்றிப் பெண்ணினத்திற்கொரு நல்லுரை யெனத் தலைப்பிட்டு வரைதலென்பது முறையோவென வினவும் வினாவு மெழுதல் இயற்கையே. பெண்ணின் பெருமையை நிலை நிறுத்தி என்றுமே நிலைபெறு மொன்றாய் இயங்கவைத்தல் பெண்ணிற்குமட்டுமன்று. ஆடவற்குமுண்டென்று முதலிலே கூறினால், என் தலைப்பிற்கோர் எதிருரை எழாதென எண்ணுகின்றேன். பெண் ஒருத்தி எம்முறையில் வாழ்ந்தால் அவள் தன் பெருமையை நிலைபெறச் செய்யத் தகுதியுடையவளாய் இருக்கின்றாளென்பதை முதலிலறிதல் நன்றெனப் பெண்ணினத்தைப் பெருவிருப்புடன் வினவுகின்றேன். பெண்ணொருத்தி முதலில் தன் குழவிப் பருவங் கடந்ததும், பெண்மைத் தன்மை எய்துகின்றாள். பெண்மைத் தன்மையென்பது பூப் பெய்தலென்பதே. பெண்ணொருத்தி பூப்பெய்தல் அடையு முன்னரே கல்வியறிவு அடையவேண்டுவது முதன்மை. அவ்வாறு அவள் கல்வியறிவு அடையுந் தருணத்து அவள்தன் பெற்றோர்கள் அவளை நல்வழியிற் கொண்டு செல்லமுயலுதல் நன்று. ஆடவர் அவர்தம் வினையின் பொருட்டுப் பொருளீட்டப் போவதும் அதற்குறு வழிதுறை ஆய்தலுக்குமே அவர்க்குப் பொழுதிருக்குமே தவிர, பிறவினைகளை - குடும்பப் பொறுப்புக்களைத் தாங்கி நடத்தி, அவரை ஊக்குவித் தவர்தம் வினைக் கனுப்புதல் பெண்ணேயென நீ புரிந்து ஒழுகினால் எவ்வாறு உன் வாழ்வு மலருமென்பதை நீ யறியாயோ? அவ்வாறிருக்க, அந்நல்வழி தவிர்த்துத் தன் கணவன் ஈட்டும் பொருட்களைப்

* நெல்லை இயக்குநர்வழி வரைந்தனுப்பிய கட்டுரை.

பேண வகையறியாது, பொருளைப் பாழ்படுத்தி, அவரைக் கடிந்து, தாம் கொணரும் பொருளைக் கொண்டு எவ்வாறு குடும்பம் நடத்தலியலும்? என் பெற்றோர் வீட்டில் சிந்திச் சிதறியும் பொருட்களுக்கு உமது வருமானம் எம்மட்டு? என் றிடித்துரைக்கும் ஏந்திழைகளுமில்லையென உரைக்கலாமோ? இருக்கின்றனர்.

இவ்வாறு அவர்தம் கணவரை மதியாது தான் பிறந்த வீட்டுப் பெருமையையே எதற்கெடுப்பினும் சான்று காட்டிக் கணவன் மனம் வருந்தச் செய்து, சூளுரைக்கும் நம் இனமாம் பெண்ணினமும் நிறைந்திருக்கின்ற தென்பதைப் பெண்ணினமே! நீ மறுக்கவியலுமோ, இயலாது. அத்தகைய முறையில் நீ ஒழுகுவது பெருந்தவறு என்று, நீ உன் பெற்றோரினில்லம் விட்டு, மணவினை நிகழ்ந்து, மணமகன் கைப் பிடிக்கின்றனையோ, அன்றே நீ அவனுடைமை; அவனே உனக்கு உற்றான், உறவினன் என்று கொண்டொழுகல் நன்று. அவனுக்கு வரும் குறை உனக்கு வருவது. அவனுக்கு வரும் நிறைவு உனக்கு உரித்து என்று நீ முதலில் அறிதல் நன்று. அவன் நலனே உன் நலன். அவனை ஓர் அரசனென நினைந்து நீ ஓர் அமைச்சனென வழிவகுத்து, உன் இல்லறத்தை வள முறச் செய்தால் அதைவிடப் பெண்ணினத்தின் பெருமைக்குச் சான்றேது? சாந்தம் என்னும் கருவியை நீ கைக்கொண்டு உன் இல்லறம் என்ற பொறியை நீ நடத்தினால் நல்வாழ்வு நாட்டோர் வியக்க, வாழலாமென்பதை நீ அறிய இயலுமே. என்றுமே, ஒருமுறைதவிர, ஒரு பெண் வேறு எவரையும் எம்முறையிலும் அழைக்கலாம். அண்ணன், தம்பி. அத்தான், மாமா, தாத்தா, கொழுந்தர் (அத்தான்-தன்கணவனின் மூத்தவர்); (கொழுந்தர்-தன் கணவனின் இளையவர்) என்று பிற ஆடவரை அழைக்க லாம். கணவன் என்று மாற்றானொருவனை அழைக்கத் துணிவாளோ, நந்தமிழ்நாட்டு நங்கை. பெண்ணே! நீ இதைக் கருத்துட்கொண்டால், உன் கணவனின் தன்மையென்ன வென்பதை அறியலாமன்றோ? இதனையே சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம், வழக்குரைகாதையில் கற்பிற்சிறந்த கண்ணகியினுரையைச் செவியுற்ற தென்னவனின் மனைவி கோப் பெருந்தேவியின் உள்ளுணர்வை வெளிக்கொணர்ந்திருக்கும், இளங்கோவடிகளின் இன்மொழியாம்,

''யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயு ளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்

கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி."

என்பதைப் பெண்ணே, நீ புரிந்தால் கற்புடைமகளிர்க்குக் கணவனே கண்கண்ட தெய்வமென்பது தெற்றெனத் தெரியுமன்றோ? மேலும் சிலப்பதிகாரம் புகார்க்காண்டம், கனாத்திற முரைத்த காதையில், கற்பிற்சிறந்த கண்ணகிக்கு, அவள் தன் தோழியாகிய தேவந்தி என்பாள் உரைத்த உரையும் அதற்குக் கண்ணகியின் மறுமொழியும் தருகின்றேன்.

"பொற்றொடீஇ
கைத்தாயு மல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
சோமகுண்டஞ் சூரியகுண் டந்துறை மூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பார் யாமொருநாள்
ஆடுதுமென்ற அணி யிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றென விருந்த பின்னரே."

(இ - ள்.) "பொன்னாலாய வளையணிந்த வளைக்கையளே! (கண்ணகி) உன் கணவனால் நீ வெறுக்கப்படவுமில்லை. நீயோ முற்பிறப்பில் உன் கணவன் பொருட்டுக் காக்கவேண்டுமொரு நோன்பினை விடுத்தாய். அதன்பயனே, உனக்கு இவ்வாறு கணவனைப் பரத்தையொருத்திக்குப் பணயம் வைக்கும் நிலை வந்தது. ஆகையால் கண்ணகி! காவிரி சங்கமத்தருகிருக்கும், நெய்தனிலத்துக் கானலிடத்தே இருக்கும் சோமகுண்டம், சூரியகுண்டமென்ற நீர்ச்சுனைகளில் நீராடி, காமவேள் கோவிலை வணங்கினால், மகளிர் இவ்வுலகத்திலே அவர்தம் கணவரோடிணைந்து, நகமுஞ்சதையும்போல் நீங்காதிருந் தின்புறுவர்; மேலும் மறுமையிலும் தம் கணவருடன் பிரியாதிருந் தின்புறுவர். நாமும் ஒருநாள் அக்குண்டத்திற்போய் நீராடி மலர்க்கணைவேளை வணங்கினால் நலம் பெறலாம்", என்றாள். கற்பிற் சிறந்த கண்ணகியின் பதிலை, பெண்ணினமே! நீ புரிந்தால் உன் கணவனின் தன்மையை அறிவாய். "தேவந்தி, அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வந்தொழல் எங்கட்கு இயல்பன்று. கணவனே கற்புடை மகளிருக்குக் கடவுள்என அறி" என்றாள்.

பெண்ணே! கற்பிற் சிறந்த கண்ணகியின் மறுமொழியை நீ கருத்துட்கொண்டே வாழ்தல் சிறந்ததன்றோ! அவ்வாறில்லாது

நின் கணவனை மதித்தொழுகாது நீ வாழ்ந்தால் உன்னை ஊரார் ஒப்புவரோ! சிந்தி! அடங்காப்பிடாரியெனப் பெயரிட்டு, உன்னை உன்னினமும் உடனியைந்து நீ செல்லுங்கால் உன்னையே பற்றி உரையாடுவதும், உற்றுநோக்குவதும் உணர்ந்தால் உன்குறையை நீ அறியலாமல்லவா? உன்னுடன் அவ்விழுக்கு நின்றுவிடுகின்றதா? உன் போன்ற பெண்மகளிருக்குத் தனியொரு விருதல்லவா கிடைக்கின்றது. "நூலைப்போல் சேலை; தாயைப்போல் பிள்ளை", யென ஊரார் உரைக்கத் தயங்குவரோ? நீயே சிந்தித்தறி. உன் பழக்கவழக்கங்களைப்பின்பற்றித்தானே உன் சந்ததியும் செயலாற்றும். இதை நீ மனத்துட்கொண்டால், உன் கணவனை நீ மதியாதொழுகுதல் தீதெனக்காணலாமல்லவா? உன் கணவனை நீ மதித்து நடந்தாலே ஊராரும் போற்றுவர். உன் இனமும் போற்றும்.

பெண்ணே! உன் இல்லறம், அன்பும் அறமும் உடையதாக விளங்கினல் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் நல்லறமாகுமென அறிந்தும், தன் கணவனையும், தன் இனத்தையும் நல்லறத்திலே நடக்கச் செய்து, தானும் அறநெறி தவறாது வாழ்கின்ற இல்வாழ்வாம் நல்வாழ்வே தவம் செய்வார் நிலையைவிடப் பெரிய தொன்றாயமையுமெனக் கண்டு அதன்படி நீ நடந்தும், இல்வாழ்க்கைக் கேற்ற மாண்புடையவளாகி, தன் கணவனின் வருவாய் தெரிந்து, அதற்குத் தகுந்த முறையில் வாழ்க்கையை வழிவகுத்து நடத்துகின்ற நங்கையே இல்வாழ்வென்பதற்கேற்ற துணையாவாளென்பதை யறிந்து அதன்படி ஒழுகியும், இல்வாழ்க்கைக்கேற்ற துணைவி நானே, நற்பண்புடையவள் நானே, என் இல்வாழ்க்கையை என் கணவனுடன் கருத்தொருமித்து, வேறு தெய்வம் தொழாது, கற்புடைமகளிருக்குத் தன் கணவனே தெய்வம் என்ற உண்மை நாடறிய வள்ளுவருரைத்த மொழிக்கோரிலக்கியமாய், வாழ்ந்து காட்டியும்,

> "பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழும் உலகு."

என்ற மாதானுபங்கியின் மணிமொழியைப் பின்பற்றி என் கணவனைப் போற்றிக் கடமை செய்யத் தயங்கேன், என்றியம்பி நடந்து காட்டியும் வையத்து நீ வாழ்ந்தால் உன் சிறுமையொழிந்து பெருமைக்கோரெடுத்துக் காட்டாய், உரைகல்லாய், "நீ வாழவே விரும்புகின்றேன்," வாழ்வாய். மேலும்,

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்ற செந்நாப்போதாரின் செம்மொழியை நீ புரிந்து அதன்படி நீ ஒழுகுதல் நன்றென மீண்டும் வேண்டுகின்றேன். பொருளும் தருகின்றேன். பெண்மைக்கே உரித்தான உறு பொருளாம் கற்பைக் காத்து, தன் கணவனையும் போற்றி, தகுமுறையிற் பேணி, பெண்ணினத்திற்கே இம்மகள் ஓர் எடுத்துக்காட்டு என்ற பெருமை நிறைந்த புகழைக் காப்பாற்றி என்றுமே மேற்குறித்த நிலையில் நின்றொழுகி, உறுதி குலையாது, உள்ளத் தென்றுமே தன் கணவனைக் கடவுளென நினைந்து வாழ்கின்ற வளே பெண் என்பதே.

என் இனமே! எனது உரையை நீ நன்கு ஆராய்ந்து அதன் வழி நடக்கத் துணைபுரியத் திருவருளை வணங்கி, இயக்குநர் வழி வரைந்த என்சிற்றுரையை முடித்து விடைபெறுகின்றேன். விருப்பிருப்பின் தொடருவேனென்ற உறுதியுமளித்தே மறைகின்றேன், வணக்கம். காலம் வரையறுக்கப்பட்டுவிட்டது.

திருவரங்க நீலாம்பிகை,
காணாவுலகவாசி.
(திருவரங்கம்பிள்ளை இல்லக்கிழத்தி)

ஆங்கிலநாள்
1-1-60

---

*பொங்கல் வாழ்த்து

தொல்லுலகில் தென்பாண்டி நாடதிலே, தென்னவன் கோயில் கொண்ட தமிழகத் திருநாளாம், தமிழனின் திரு நாளாம், பொங்கல் திருநாளாம், தமிழன்னை தன் வளத்தை வாரியிறைத்து வையத்துப் பொலிவுகொண்டு மக்கள் தம் மனத் திலே மறுமலர்ச்சி ஊட்டுகின்ற உறுநாளாம் தைத்திருநாளில், தமிழரின் தன் குறைகள் நீக்க வரும் நிறை நாளாம் திருநாளில், உழவரின் உழைப்பின் பயனைப் பலரறியப் பயன்படுத்தும் பெரு நாளாம் இந்நாளில், கன்னியர் தம் கவலைகள் போக்குதற்குரிய வழிதுறைகள் வகுப்பதற்கென வந்ததோர் மணநாளாம் இந் நாளில், தைபிறந்தால் வழிபிறக்குமென மாதர் மனத்தொரு மகிழ்வெய்துவிக்கும் மணநாளாம இந்நாளில், தொன்மை கொண்ட திருநாளாம் இந்நாளில், எவருள்ளும் எக்களிப்பு ஏறு கின்ற நன்னாளாம் இந்நாளில், பொங்குமிதயத்துப் பொங்கி வரும் களிப்புடைய களிநாளாம் இந்நாளில், அலகுடை நீழலர் நிறைநாளாம் இத்திருநாளில், கன்னியவள் கைப்பிடித்த காளை யவன் இல்லமதில் ஏற்றமுடன் பொங்கல் வைக்கப் புத்தாடை

* நெல்லை இயக்குநர்வழி பொங்கல் விழாவன்று வந்தது.

நின் கணவனை மதித்தொழுகாது நீ வாழ்ந்தால் உன்னை ஊரார் ஒப்புவரோ! சிந்தி! அடங்காப்பிடாரியெனப் பெயரிட்டு, உன்னை உன்னினமும் உடனிியைந்து நீ செல்லுங்கால் உன்னையே பற்றி உரையாடுவதும், உற்றுநோக்குவதும் உணர்ந்தால் உன்குறையை நீ அறியலாமல்லவா? உன்னுடன் அவ்விழுக்கு நின்றுவிடு கின்றதா? உன் போன்ற பெண்மகளிருக்குத் தனியொரு விரு தல்லவா கிடைக்கின்றது. "நூலைப்போல் சேலை; தாயைப்போல் பிள்ளை", யென ஊரார் உரைக்கத் தயங்குவரோ? நீயே சிந்தித் தறி. உன் பழக்கவழக்கங்களைப்பின்பற்றித்தானே உன் சந்ததியும் செயலாற்றும். இதை நீ மனத்துட்கொண்டால், உன் கணவனை நீ மதியாதொழுகுதல் தீதெனக்காணலா மல்லவா? உன் கணவனை நீ மதித்து நடந்தாலே ஊராரும் போற்றுவர். உன் இனமும் போற்றும்.

பெண்ணே! உன் இல்லறம், அன்பும் அறமும் உடையதாக விளங்கினல் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் நல்லறமாகு மென அறிந்தும், தன் கணவனையும், தன் இனத்தையும் நல்லறத் திலே நடக்கச் செய்து, தானும் அறநெறி தவறாது வாழ்கின்ற இல்வாழ்வாம் நல்வாழ்வே தவம் செய்வார் நிலையைவிடப் பெரிய தொன்றாயமையுமெனக் கண்டு அதன்படி நீ நடந்தும், இல் வாழ்க்கைக் கேற்ற மாண்புடையவளாகி, தன் கணவனின் வருவாய் தெரிந்து, அதற்குத் தகுந்த முறையில் வாழ்க்கையை வழிவகுத்து நடத்துகின்ற நங்கையே இல்வாழ்வென்பதற் கேற்ற துணையாவா ளென்பதை யறிந்து அதன்படி ஒழுகியும், இல்வாழ்க்கைக்கேற்ற துணைவி நானே, நற்பண்புடையவள் நானே, என் இல்வாழ்க்கையை என் கணவனுடன் கருத் தொருமித்து, வேறு தெய்வம் தொழாது, கற்புடைமகளிருக் குத் தன் கணவனே தெய்வம் என்ற உண்மை நாடறிய வள்ளுவ ருரைத்த மொழிக்கோ ரிலக்கியமாய், வாழ்ந்து காட்டியும்,

"பெற்ருன் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு."

என்ற மாதானுபங்கியின் மணிமொழியைப் பின்பற்றி என் கணவனைப் போற்றிக் கடமை செய்யத் தயங்கேன், என் றியம்பி நடந்து காட்டியும் வையத்து நீ வாழ்ந்தால் உன் சிறுமை யொழிந்து பெருமைக்கோ ரெடுத்துக் காட்டாய், உரைகல்லாய், "நீ வாழவே விரும்புகின்றேன்," வாழ்வாய். மேலும்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்ற செந்நாப்போதாரின் செம்மொழியை நீ புரிந்து அதன்படி நீ ஒழுகுதல் நன்றென மீண்டும் வேண்டுகின்றேன். பொருளும் தருகின்றேன். பெண்மைக்கே உரித்தான உறு பொருளாம் கற்பைக் காத்து, தன் கணவனையும் போற்றி, தகுமுறையிற் பேணி, பெண்ணினத்திற்கே இம்மகள் ஓர் எடுத்துக்காட்டு என்ற பெருமை நிறைந்த புகழைக் காப்பாற்றி என்றுமே மேற்குறித்த நிலையில் நின்றொழுகி, உறுதி குலையாது, உள்ளத்தென்றுமே தன் கணவனைக் கடவுளென நினைந்து வாழ்கின்றவளே பெண் என்பதே.

என் இனமே! எனது உரையை நீ நன்கு ஆராய்ந்து அதன் வழி நடக்கத் துணைபுரியத் திருவருளை வணங்கி, இயக்குநர் வழி வரைந்த என் சிற்றுரையை முடித்து விடைபெறுகின்றேன். விருப்பிருப்பின் தொடருவேனென்ற உறுதியுமளித்தே மறைகின்றேன், வணக்கம். காலம் வரையறுக்கப்பட்டுவிட்டது.

திருவரங்க நீலாம்பிகை,
காணாவுலகவாசி.
(திருவரங்கம்பிள்ளை இல்லக்கிழத்தி)

ஆங்கிலநாள்
1-1-60

---

*பொங்கல் வாழ்த்து

தொல்லுலகில் தென்பாண்டி நாடதிலே, தென்னவன் கோயில் கொண்ட தமிழகத் திருநாளாம், தமிழனின் திருநாளாம், பொங்கல் திருநாளாம், தமிழன்னை தன் வளத்தை வாரியிறைத்து வையத்துப் பொலிவுகொண்டு மக்கள் தம் மனத்திலே மறுமலர்ச்சி ஊட்டுகின்ற உறுநாளாம் தைத்திருநாளில், தமிழரின் தன் குறைகள் நீக்க வரும் நிறை நாளாம் திருநாளில், உழவரின் உழைப்பின் பயனைப் பலரறியப் பயன்படுத்தும் பெருநாளாம் இந்நாளில், கன்னியர் தம் கவலைகள் போக்குதற்குரிய வழிதுறைகள் வகுப்பதற்கென வந்ததோர் மணநாளாம் இந்நாளில், தைபிறந்தால் வழிபிறக்குமென மாதர் மனத்தொரு மகிழ்வெய்துவிக்கும் மணநாளாம இந்நாளில், தொன்மை கொண்ட திருநாளாம் இந்நாளில், எவருள்ளும் எக்களிப்பு ஏறுகின்ற நன்னாளாம் இந்நாளில், பொங்குமிதயத்துப் பொங்கி வரும் களிப்புடைய களிநாளாம் இந்நாளில், அலகுடை நீழலர் நிறைநாளாம் இத்திருநாளில், கன்னியவள் கைப்பிடித்த காளையவன் இல்லமதில் ஏற்றமுடன் பொங்கல் வைக்கப் புத்தாடை

---

* நெல்லை இயக்குநர்வழி பொங்கல் விழாவன்று வந்தது.

* பாரதத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குத்

தென்னடு தந்திருக்கும் உதவிப்பங்கு

[கோவைகிழார்]

இந்தத்தலைப்பில் பாரதவானொலி நிலையத்தார் ஏழு சொற்பொழிவுகளை வகுத்து நாளது தேதி முதல் இரண்டு திங்கள்வரை ஏழு அறிஞர்களைக்கொண்டு நடத்துவதாக ஏற்பாடு செய்து விளம்பரப்படுத்தி உள்ளார்கள். இந்த ஏற்பாட்டின் கருத்து மிக உயரியதாகும். தென்னட்டிற்குத் தகுந்த இடத்தைப்பாரத வானொலி கொடுக்கவில்லை என்பது பொது மக்கள் கருத்து. அந்தக் குறைவை நிறைவுபடுத்த இந்த ஏற்பாடு செய்திருக்கக்கூடும். ஆனல் அக்குறைவு நிவர்த்தி ஆகுமா என்பது தென்னட்டார் நெஞ்சில் தோன்றும் கேள்வி. தென்னடு செய்திருக்கும் உதவி தென்னட்டாருக்கு அன்றோ தெரிந்திருக்கும்? அந்த முறையில் எது வரையில் வானொலித்திட்டம் நிறைவேற்றியிருக்கிறது என்று ஒரு சிறிது ஆராய்வோம்.

தென்னட்டில் நான்கு மொழிகள் சிறப்பாக இருந்த போதிலும் அவைகளில் தமிழ்மொழிதான் மிகச்சிறந்த பண்பாடு உற்றிருக்கிறது என்பது உலகமறிந்த செய்தி. மிகமிகப் பண்டைய மொழியாதலால் அது செய்திருக்கும் உதவி அளத் தற்கியலாது. அப்படி இருக்க ஏழுசொற்பொழிவாளர்களில் குறைந்தது நான்கு சொற்பொழிவாளர்கள் தமிழர்களாக இருத் தல்வேண்டும். மற்ற மொழிகளுக்குப் பங்குவீதமாக ஒவ்வொன்று கொடுத்திருக்கலாம் ஆனல் வானொலி நிலையத்தார் வகுத்துள்ள திட்டம் எப்படி என்று காணலாம்.

1. எண்ணமும் தத்துவமும்: Thought and philosophy—Dr. T. M. P. மகாதேவன்.
2. கலையும் சிற்பமும்: Art and Architecture—Dr. C. L. Fabri.
3. இலக்கியம்: Literature—M. சத்திய நாராயண.
4. இன்னிசையும் ஆடலும்—திருவாட்டி. ருக்மணி அருண்டேல்.
5. சமூக வழக்கங்களும் நிலையங்களும்: Social Customs and Institutions—K. K. பிள்ளை.

---

* பாரத வானொலிப் பேச்சு.

6. தென்னாட்டுப் புராணிகம்: Mythology of the south—Dr. R. N. தண்டேகர்.
7. அரசியல் நோக்கமும் நிலையங்களும்: Politic concepts and Institution—K. M. பணிக்கர்.

1. இவர்களில் டி. எம். பி. மகாதேவன்—சென்னை அந்தணர், தத்துவ ஆராய்ச்சியாளர், அத்துவைதி. 2. C. L. Fabri—இவர் வெளி நாட்டார், தென்னாட்டாருக்கு அறிமுகம் ஆகாதவர். 3. சத்திய நாராயண—ஆந்திரர், 4. ருக்குமணி அருண்டேல்—தமிழ் அந்தணர், ஓர் ஆங்கிலரை மணந்தவர். கே. கே. பிள்ளை. திருவாங்கூர்த் தமிழர். 6. தண்டேகர்—மராட்டியர். 7. பணிக்கர்—மலையாளர்.

இவர்களில் தென்னாட்டு எண்ணப் போக்கையோ தத்துவ வரலாற்றையோ விளக்க ஒரு தமிழர் தென்னாட்டிற்குச் சிறப்பாக உள்ள சைவ, வைணவ சித்தாந்தத்தை அறிந்த அறிஞர், ஒருவரும் நிலையத்தார்க்குக் கிடைக்கவில்லை எனத் தோன்றுகிறது. தென்னாட்டுச் சிற்பத்தைச் சொல்ல வெளி நாட்டார் தான் வேண்டுமோ? இலக்கியத்திற்கு ஓர் ஆந்திரர்தான் பிரதிநிதி போலும்! இன்னிசையைப் பற்றியும் ஆடலைப் பற்றியும் குறை சொல்வதற்கில்லை. சமூக வழக்கங்களைப் பற்றியும், நிலையங்களைப் பற்றியும் தமிழ் நாட்டில் பிறந்த மக்களில் ஒருவரும் கிடைக்க வில்லை போலும்! பௌராணிகத்திற்கு ஒரு மராட்டியர்தான் வேண்டும்போலும்! தமிழில் புராணங்களே இல்லை போலும்! அரசியலுக்குப் பணிக்கர் இருக்கலாம். தமிழரசு இன்னமும் வெற்றியடைய வில்லை அல்லவா?

தென்னாட்டில் உயரிய எண்ணப் போக்கு சைவ வைணவ சித்தாந்தங்களில் தான் உண்டு. சிறப்பாகத் தமிழ் மொழியில் தான் உண்டு. இவற்றை வடமொழியில் காணமுடியாது. ஆனால் தெரிந்தெடுத்த அறிஞரோ வடமொழி அறிஞர். அத்துவைதத்தில் பேருரையாளர். அவரைத் தெரிந்தெடுத்ததில் சைவ வைணவ சித்தாந்தங்களை நன்குணர்ந்த தமிழர் ஒருவர் இல்லாத குறை என்கிறார்களோ தெரியவில்லை. தென்னாட்டு வீரசைவத்தைக் கூறக்கூடிய தமிழரும் கிடைக்கவில்லை போலும்!

கலையும் சிற்பமும் தென்னாட்டைப்போல வடநாட்டில் கிடையா. தென்னாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பப் பெருமையை உலகிலேயே வேறு எந்த நாட்டிலும் காணல் அரிது. அதனை இயற்றியவர் - பெருக்கினவர் ஆதரித்தவர் எல்லாரும் தமிழர்களே. குடைக்கோயில், தேர்க்கோயில், கற்கோயில், அடுக்குக்கோயில், கூட கோபுரங்கள், மண்டபங்கள்,

தூண் சிற்பங்கள், மூர்த்திகள் முதலியவை வேறு எந்த இடத்திலும் காண இயலா. இவைகளை விளக்கப் பிற நாட்டார்தான் வேண்டும் போலும்! கோயிலுக்குள் நெஞ்சார்ந்த அன்போடு நுழைய இயலாத ஒரு பிறநாட்டான்தான் விளக்க முடியுமோ?

இலக்கியங்களில் தமிழ் இலக்கியமே மிகப்பண்டையதும் பல ஆயிரமாண்டுகளாக வளர்ச்சியும் ஒப்பற்ற தனி இயல்பையும் பெற்றது. மற்ற இலக்கியங்கள் ஆயிரம் ஆண்டளவில் புதிதாகக் கிளம்பியவை. அப்படியிருக்கத் தமிழ் இலக்கியமே அறியாத ஒருவர் எவ்வாறு அதனை எடுத்துக்கூற முடியும்? இன்னிசை நடனம், இவைகளைப்பற்றி அவைகளில் தேர்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்தது சரியே. ஆனால் தமிழ்ப் பண்முறையை அறிந்தவர் கூடச் சேர்ந்திருந்தால் நன்றாக இருக்கும். தென்னாட்டுச் சமூகப் பழக்கவழக்கங்களும் நிலையங்களும் எவ்வகையில் சிறந்தன என்று விளக்குவதற்குத் தமிழ்நாடுமுழுவதையும் அறிந்த ஓர் அறிஞர் இருந்தால் நலமாக இருக்கும். நாட்டுப் பாடல்கள் நாட்டுக் கலைகள் இவைகளை நன்குணர்ந்த ஓர் அறிஞர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும். வேறு வரலாற்று ஆசிரியர் இதற்குத் தக்கவர் அல்லர். தென்னாட்டுப் பௌராணிகம் மிகச்சிறந்த இலக்கியமாகும். வேறு எந்நாட்டிலும் இல்லாத களஞ்சியம் தமிழ்நாட்டுக் கோயில் வரலாறுகளில் உள்ளன. அவைகள் இங்கே தலபுராணங்கள், தலப் பிரபந்தங்கள் என்ற பெயர்களில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் வளர்ச்சியைக் கண்டால் ஒரு தனித்த முறையில் அவை பரிணமித்திருக்கின்றன என்று கூறலாம். இவைகளை விளக்க ஒரு தனித்தமிழறிஞர் வேண்டும்.

இனி இறுதியாகத் தென்னாட்டு அரசியல் முறைகளை ஒரு வரலாற்று ஆசிரியர்தான் விளக்கமுடியும். அதில் தெரிந்தெடுக்கப்பட்ட ஆசிரியரைப்பற்றிக் குறைகூற வேண்டியதில்லை. பொதுவாக எடுத்துக்கொண்ட தலைப்பு சிறந்ததானாலும் அதனை விளக்கக்கூடிய அறிஞர்கள் தக்கவர்களோ என்று ஐயப்படக்கூடிய அளவில் அமர்ந்திருக்கிறார்கள். அதனை இன்னும் சிறப்பாக விளக்கக்கூடியவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தால் நலமாக இருக்கும். தென்னாட்டின் அபாக்கியமான நிலை, நல்ல கருத்துக்களிலும் பிறர் புகுந்துகொண்டு அதனை மழுங்கச் செய்துவரும் நிலைமையாக இருக்கிறது. இந்த நிலை எப்போது மாறி நல்லதாக அமையுமோ அறியோம்!

---

*தமிழிசையும் கர்னாடக சங்கீதமும்

[இசைத்தமிழ்ச்செல்வர், திரு. இலக்குமண பிள்ளை, பி. ஏ.]

'கர்னாடகம்' என்னும் சொல் 'கரை நாடகம்' என்ற சொற்றொடரின் திரிபு. வடஇந்தியா கடற்கரை யடுத்திராமலும், தென்னிந்தியா மூன்று பக்கங்களிலும் கடலாற் சூழப்பட்டும் நிலைபெறுவதால் பின்னதற்கு அத் தனிப்பெயர் வரலாயிற்று. 1800 ஆண்டுகளுக்கு முன்னே 'தமிழகம்' என்று பெயர்பெற்று விளங்கிய தென்னிந்தியா சிலகாலம் செல்ல எக்காரணத்தாலோ 'கரைநாடகம்' (Carnatic) என்னும் பெயர்பெற்றது. இப்பெயர் அப்பிரதேசத்தில் வழங்கும் சங்கீதத்திற்கு இடப்படுமானால் 'தமிழிசை' என்பது 'கர்னாடக சங்கீதம்' எனப் பெயர்பெறுவது இயல்பாவதும் தவிர, பின்னதன் அடிப்படை 'தமிழிசை' என்பதையும் ஒருவாறு குறிப்பாக விளக்குகின்றதல்லவா? ஆரிய சங்கீதம்மட்டும் தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்தால் 'கர்னாடக சங்கீதம்' என்னும் பெயர் அதற்கு வாய்ப்பதரிது.

வேறு சில அத்தாட்சிகளைப் பார்க்கும்போதும், கர்னாடக சங்கீதம் தனி ஆரிய சங்கீதம் அன்றென்று வெளிப்படுகின்றது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தில் தமிழிசையைப்பற்றி விரிவான விவரணம் காணப்படுகின்றது. கர்னாடக சங்கீத ஏற்பாட்டின் முறைப்படி எழுதப்பட்ட அடிப்படை நூல் சாரங்கதேவரின் 'சங்கீத ரத்னாகரம்' ஆம் என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவர் வாழ்ந்திருந்தது கி. பி. 13ஆவது நூற்றாண்டின் முற்பகுதியிலாம். காஷ்மீர் தேசத்தில் பிறந்த ஒரு குடும்பத்தவரானாலும், அவருடைய பாட்டனார் 'பாஸ்கரர்' என்பவர் தக்கண இந்தியாவில் 'டௌலட்டபாட்' என்னும் நகரத்தில் குடிபுகுந்தார். அவருடைய குமாரர் 'ஸ்ரீ சோடலா'வுக்குப் பிறந்தவர் சாரங்கதேவர். ஆதலால், சங்கீத ரத்னாகரத்திற்குப் பிறப்பிடம் தென்னிந்தியாவென விளங்குகின்றது. தனித் தமிழிசை விளங்கிய காலத்திற்கும், கர்னாடக சங்கீதம் வர வர உருவெடுத்து வந்த காலத்திற்கும் இடையில் ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகள் சென்றனவென்று இதனால் விளங்குகிறதல்லவா? அவ்வாறாயின் சாரங்கதேவரும், அதற்குப்பின் வாழ்ந்த ராமாமாத்தியார் முதலிய சங்கீத வித்வான்களும், தனித்தமிழிசையைப்பற்றி ஒன்றும் அறியாமலிருக்க முடியுமோ? முடியும் என நினைப்பது இயற்

* குமரன் தமிழ் இசை மலர் (2-4-42) இல் வெளிவந்தது.

கைக்கும் மக்கள் வரலாற்றின் போக்குக்கும் நேரே முரணுவ தாகும். உண்மையில் முற்கூறிய இருவரும் தமிழ்ப் பண்களைப் பற்றி எடுத்துக் கூறியும் இருக்கிறார்கள்.

இது இங்ஙனம் இருக்க, தமிழிசையில் பன்னிரு பாலையின் உரு, தொண்ணூற்றொன்றென்றும், பன்னிரண்டுமாய், ஆக 103 பண்கள் இருந்தன. இவற்றில் தேவாரத்தோடியைந்து, இப் போதும் ஓதுவார்கள் பாடிவரும் 24 பண்களைக் குறைத்தால், மீதி 79 பண்களும் எங்குப் போயின? எவ்வாறு மறைந்தன? 24 பண்கள் இன்னும் உயிரோடிருக்கலாகுமென்றால் மற்றைப் பண்கள் அவ்விதம் வாழ்ந்திருக்கத் தடையென்ன இருந்தது? அவை மறைந்துபோனதின் மாயமென்ன?

உண்மையில் அவை எங்கும் மறைந்துபோகவில்லை. கர்னாடக ராகங்களாகப் பெயர்பெற்றன. கீழ்க்கண்ட பட்டியின்படி தனித்

தனித்தமிழ்ப் பண்கள்	அவற்றோடு ஒக்கின்ற கர்னாடக ராகங்கள்
செவ்வழி	...யதுகுல காம்போதி
சாதாரி	...காமவர்த்தனி
வியாழக்குறிஞ்சி	...சௌராஷ்டிரம்
பழந்தக்கராகம்	...ஆரபி
இந்தளம்	...மாயாமாளவகௌளை
புறநீர்மை	...பூபாளம்
நட்டராகம்	...பந்துவராளி
நட்டபாடை	...நாட்டை
கொல்லி	...பிலஹரி
கொல்லிக் கௌவாணம்	...நவரோஜ
தக்கேசி	...காம்போதி
தக்கராகம்	...காம்போதி (ஏறக்குறைய)
நேரிசை	...குறிஞ்சி
கௌசிகம்	...பைரவி
சாந்தார பஞ்சமம்	...கேதாரகௌளம்
பழம் பஞ்சுரம்	...சங்கராபரணம்
மேகராகக் குறிஞ்சி	...நீலாம்பரி
குறுந்தொகை	...நாதநாமக்கிரியை
அந்தாளிக் குறிஞ்சி	...சாமா
செந்துருத்தி	...மத்யமாவதி
திருத்தாண்டகம்	...ஹரிகாம்போதி
பஞ்சமம்	...ஆஹிரி
சீகாமரம்	...புன்னாகவராளி

தமிழ்ப் பண்களுக்கு இவ்வாறு வடமொழிப் பெயர்கள் கொடுத்து, அவற்றைக் கர்னாடக சங்கீத ஏற்பாட்டுக்குள் நுழைத்

ததின் வரலாறு எப்படியிருக்கலாம்? தமிழில் திருஞான சம்பந்தருடைய பாடல்களுக்கு இசைக்கப்பட்டிருந்த 19 தமிழ்ப் பண்களுக்கும், சாரங்கதேவரின் 19 மேளகர்த்தாக்களுக்கும், ஏதோ இயைபு இருந்ததென்று நினைக்க இடமுண்டு. அப் பண்களே அம்மேளகர்த்தாக்களின் அடிப்படையாக இருந் திருக்கலாம். அதற்குப்பின் தோன்றிய ராமாமாத்தியர் தமிழ்ப் பண்களுக்கும், அவற்றிற்கு எதிரில் குறிக்கப்பட்ட கர்னாடக ராகங்களுக்கும், இப்போது பாடிக்கொண்டு வருகிற முறையில் மிகுந்த ஒற்றுமைப்பாடு கண்கூடாக காணக்கிடக்கின்றதால் ஒன்று, மற்றொன்றாகப் பெயர் மாற்றப்பட்டது என்று முடிவு கட்டுவதற்குத் தடையென்ன இருக்கின்றது? காலத்தில் மேள கர்த்தாக்களின் தொகை சற்றுக் குறைந்தது. கி. பி. 17ஆவது நூற்றாண்டிலிருந்த வெங்கிடமகியின் காலத்திலோ அவருடைய தந்தையார் கோவிந்த தீட்சதரின் காலத்திலோ 72 மேளகர்த் தாக்கள் கர்னாடக சங்கீதத்தில் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப் படுகிறது.

ஆதியில் மேளகர்த்தாக்கள் எப்படி உற்பத்தியாயிருக்கலா மென்றால், முன் உலகவழக்கிலிருந்த பல ராகங்களையும், வகைப் படுத்தி, அவற்றிற்குப் பொதுவான சுரங்களைக் (க்ரிம்ஸ்லாவைக் கண்டுபிடித்ததுபோற்) கண்டுபிடித்து, அவற்றோடு மேலேழும் கீழேழும் சுரங்களைப் பூர்த்திசெய்தா யிருக்கவேண்டும். இப்படித் தமிழிசையில் பெரும் பண்களும் உற்பததியாயிருக்க வேண்டும். கர்னாடக சஙகீத ஏற்பாட்டில் மேளகர்த்தாக்கள் உற்பத்தியான தும், பெருகினதும் இவ்வாறேயென்று கொள்ளவேண்டும். அதில் 72 மேளகர்த்தாக்கள் இயற்றியபின், சில மேளகர்த்தாக்களி லிருந்து புதிதாக ஜன்னிய ராகங்களையும் உண்டாக்கி யிருக்கக் கூடும். அன்னிய நாட்டு ராகங்களையும் பெயர் மாற்றியோ, மாற்றாமலோ, மேளகர்த்தாக்களுக்குள் புகுத்தக்கூடும். உண்மை யில், இந்த மேளகர்த்தாக்களுக்கெல்லாம் முற்றிலும் இயைந்த ராகங்கள் ஒருகாலத்தும் உலகவழக்கில் இருந்ததில்லையென்பது திண்ணம். பன்னிரண்டு சுரங்களை ஏழேழாக இடப்பெயர்ச்சி செய்தால் மேலும் கீழுமாக 72 சுரத்தொகுப்புக்கள் வரும். அவை 71-ம் ஆகா, 73-ம் ஆகா. இது வெறும் பள்ளிக்கணக்கு. உலகத்தில் வழங்கியிருந்த பெரிய அல்லது சம்பூர்ண ராகங் களின் தொகையன்று. இம் மேளகர்த்தாக்களை முதலில் ஏற்படுத் தியபோது, தென்னிந்தியாவில் வழங்கியிருந்த ராகங்களை யெல்லாம (தனித் தமிழ்ப்பண்கள் உள்பட) அம் மேளகர்த்தாக்க ளாகவோ அவற்றின் ஜன்னிய ராகங்களாகவோ, ஒன்றுபடுத்தி உட்படுத்தினர்கள். யார் உட்படுத்தினர்கள் என்பதை அடுத்த படியில் ஆராய்வோம்.

இவ்விடத்தில் கனம் T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் (Retd. Commissioner, Hindu Religious Endowments Board) செய்த ஆராய்ச்சிக்கு நமக்கு வெளிச்சத்தைத் தருகின்றது. அதாவது, தமிழ்நாட்டில் ஒவ்வோர் இடத்திலும் கோயில்கள் உள்ளன. அவற்றையெல்லாம் பலநாள் சென்று மேற்பார்வை செய்ததின் பயனாக அவர்களுக்கு வெளிப்பட்டது என்னவென்றால், ஒவ்வொரு கோயிலின் சார்பாகவும் சில தனிப்பட்ட குழுவினர் உள்ளார். அவர் ஓதுவார், நட்டுவர், தீட்சதர், மேளகாரர் என்ற மூன்று அல்லது நான்கு வகையினர். ஓதுவார் தனித் தமிழ்ப் பண்களை இயைத்துத் தேவாரம் முதலிய தோத்திரப் பாட்டுக்களைப் பாடுவோர். நட்டுவர் நட்டுவாங்கமும், சங்கீதமும் கோயிற் பணியிலும் மற்று நடைமுறைகளிலும் தொழிலாக எடுத்துக்கொண்டவர். மேளகாரரும் அப்படியே. வடமொழியில் இயற்றப்பட்டிருக்கும் சைவாகமங்களைச் சரிவரப் பொருள் கூறிக் கோயிற் காரியங்களை நடத்துவதற்கு வடமொழி பயின்ற தீட்சதர்களே (இவர்களும் தமிழ்ப் பிராமணரே யாவார்) ஏற்பட்டனர். இவ்வேற்பாடு ஆதிகாலந்தொட்டே தென்னிந்தியாவில் நடந்து வருகின்றது. இத் தீட்சதர்களில் சங்கீத ஞானமுடைய சிலர் மேளகாரரின் சங்கீதம் கேட்டும், நட்டுவர் முகாந்திரம் சங்கீதம் கற்றும், கர்னாடக சங்கீத சாஸ்திரத்தை எழுதப் புகுந்தனர். அப்போது தனித்தமிழ்ப் பண்களுக்கு வடஇந்திய ராகங்களோடு அவை பொருந்துமாறு வடமொழிப் பெயர்களைக் கொடுத்தார்கள். கி. பி. 17ஆம் நூற்றாண்டிலிருந்த கோவிந்த தீட்சதர் 72 மேள கர்த்தாக்களை வகுத்தபோது தமிழ்ப்பண்கள் 103-ம் வடமொழிப் பெயர்கள் பூண்டு அவர் வகுத்த கர்த்தா ராகங்களாகவும், அவற்றில் உற்பத்தியான ஜன்னிய ராகங்களாகவும் வெளித்தோற்றம் மாறியிருக்க வேண்டும். பட்டியின்படியுள்ள தமிழ்ப்பண்கள், கர்னாடக ராகங்கள், இவை தம்மிலுள்ள மிகுந்த ஒற்றுமைப் பாட்டுக்குக் காரணம் இதுவே என்று உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

ஆகவே சரஸ்வதிக் கிளை நதியும், யமுனைக் கிளை நதியும் சேர்ந்து கங்கா நதியானதுபோல் தனித் தமிழிசையும், ஆரிய சங்கீதமும் சேர்ந்து 'கர்னாடக சங்கீதம்' ஆயின. மேளகர்த்தா ஜன்னிய ராக ஏற்பாடு, தமிழிசையில் பண், பண்ணியல் ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டிருக்கலாம் என்பதும், உய்த்துணரக் கூடியதே.

ஆராய்ச்சிப் பேரறிஞர்

சதாசிவ பண்டாரத்தார் வாழ்க்கை வரலாறு

*[திரு. T. S. நடராச குருக்கள், பி. ஏ., எல். டி.]

நம் தமிழ் நாட்டில் வள்ளுவர் என்ருல் திருக்குறள் என்ற ஒப்புயர்வற்ற நூலை உலகிற்கு ஈந்த திருவள்ளுவப் பெருந்தகையையே குறிக்கும். அப்பர் என்ருல் சைவ சமய குரவர்களில் முதியவராகிய திருநாவுக்கரசு அடிகளையே குறிக்கும். அஃதே போன்று தமிழாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி உலகிலே பண்டாரத்தார் என்ற பெயர் ஆராய்ச்சிப் பேரறிஞராகிய தி. வை. சதாசிவபண்டாரத்தார் அவர்களேயே குறிக்கும். தமிழாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சியின் பண்டாரமாகவே, (கருவூலமாகவே) நம் பண்டாரத்தாரவர்கள் விளங்கினர்கள். அவர்கள் சென்ற 2-1-60 சனிக்கிழமை இம் மண்ணுலக வாழ்வை நீத்துச் சென்றது தமிழுலகிற்கு ஒரு பேரிழப்பாகும். அவ்விழப்பினல் ஆராய்ச்சி யுலகில் ஒரு பெரிய பாலைவனம் தோன்றிவிட்டது. தமிழன்னை தன் தவப்புதல்வர்களுள் ஒருவரையிழந்து கண்ணீர் வடிக்கின்ருள். அத்தகைய அறிஞர் பெருமானது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி வரைவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சோழவள நாட்டிலே பொன்னியாகிய காவிரியாற்றிற்கும் அதன் கிளையாகிய அரிசிலாற்றிற்கும் இடையே அமைந்துள்ள குடந்தை மாநகரத்திற்கு வடமேற்றிசையில் ஐந்துகல் தொலைவில் மண்ணியாற்றின் வடகரையில் திருப்புறம்பயம் என்னும் பதி உளது. அவ்வூர் பல்வளங்களும் நிரம்பியது; சைவசமய குரவர் நால்வராலும் பாடப் பெற்றது; சோழமன்னன் ஆதித்தனல் கற்றளியாக எடுப்பிக்கப்பெற்ற திருக்கோயிலைத் தன்னகத்தே கொண்டது. அத்திருப்பதியில் பழமை வாய்ந்த சைவக்குடியிலே தோன்றிய வைத்திலிங்கப் பண்டாரத்தார் என்பார் தம் மனைவி மீனுட்சியம்மையாருடன் இல்லற வாழ்க்கையை இனிது நடத்திவந்தார். அன்னேர் இருவரும் அப்பதியில் கோயில் கொண்டுள்ள சாட்சிநாதப் பெருமானிடத்தே மிகவும் ஈடுபாடுள்ளவர்கள். அவர்கள் ஆற்றிய தவப்பயனய் நம் அறிஞர் சதாசிவப்பண்டாரத்தார் நந்தன

---

* இவர் பண்டாரத்தார் அவர்கள் மைத்துனரும் சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி ஆசிரியருமாவர்.

ஆவணி முதல் நாள் (15-8-1892) இல் ஒரே புதல்வராகத் தோன்றினர். ஒரேபுதல்வரானமையின் நம் சதாசிவம் செல்வமாக வளர்க்கப் பெற்றனர்.

நம் சதாசிவம் தக்கவயதில் அவ்வூர்ப்பள்ளியில் பயின்று, பின்னர் மூன்று கல் தொலைவிலுள்ள புளியஞ்சேரியில் இருந்த உயர்தர தொடக்கப் பள்ளியில் பயின்றனர்! அதன் பின்னர்க் குடந்தை நகர உயர்நிலைப்பள்ளியில் நான்காம் படிவமுதல் பயின்று 1910 ஆம் ஆண்டில் பள்ளிப் படிப்பை முடித்தனர். அன்னர் அங்குப் பயின்றகாலை ஆர். சாமிநாத ஐயர் என்பார் தலைமை ஆசிரியராகவும் நற்றிணைக்கு உரைகண்ட பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்களும் தஞ்சை வலம்புரி பாலசுப்பிரமணியப்பிள்ளை அவர்களும் தமிழாசிரியர்களாகவும் அப்பள்ளியில் தொண்டாற்றினர். பெருமைமிக்க தமிழாசிரியர்களிடம் பயின்றதன் பயனாகப் பண்டாரத்தார்க்குத் தமிழ்க்கல்வியில் ஆர்வம் உண்டாயிற்று. அன்றியும், நற்றிணை உரையாசிரியர் கல்வெட்டுக்களின் வரலாறு பற்றியும் அவற்றை ஆராய்வதன் பயனைப் பற்றியும் அடிக்கடி கூறிவந்தமை கல்வெட்டாராய்ச்சியிலும் இவர்களை ஈடுபடச் செய்தது. புறம்பயத்திலுள்ள ஆதித்தேச்சுரத்தில் சோழமன்னன் முதலாம் ஆதித்தன் காலமுதல் விசயநகர வேந்தர் காலம்வரையில் ஆண்டமன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளும் நம் அறிஞரது ஆராய்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்தன. எனவே, பள்ளிப் படிப்பு முடிந்தபின் தமிழிலக்கிய இலக்கண நூல்களை அவர்கள் பயின்று வந்தார்கள். ஏற்படும் ஐயப்பாடுகளைத் தம் தமிழாசிரியர்களிடம் அவ்வப்போது அவர்கள் தீர்த்துக் கொள்வது உண்டு. அவர்களது கல்வெட்டாராய்ச்சிக்கு முதலில் உறுதுணையாக இருந்தது கோபிநாதராயர், எம். ஏ., எழுதிய சோழவமிச சரித்திரச் சுருக்கம் என்னும் நூலாகுமென்று அவர்களே கூறியுள்ளார்கள்.

இங்ஙனம் அவர்கள் தமிழ்மொழிப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த காலை அவர்கட்குத் திருமண ஏற்பாடு ஆயிற்று. திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள குறுக்கையில் ஒரு செல்வக்குடியில் குமாரசாமிராயர், ஆத்மலிங்கராயர் என்ற சகோதரர்கள் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்களில் இளவலாகிய ஆத்மலிங்கராயரது ஒரேபுதல்வியாகிய தையல்முத்து அம்மையை 1914இல் பண்டாரத்தார் மணந்தனர். மணமானபின் வாழ்க்கைக்கு ஓர் அலுவல் தேடும் இன்றியமையாமையும் நேர்ந்தது. இப்போதெல்லாம் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் வெளியீடாகிய 'செந்தமிழி'ல் கட்டுரைகள்

எழுதத் தொடங்கி விட்டனர். அப்போது திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் தமிழாசிரியராயிருந்த பண்டித ந. மு வேங்கடசாமிநாட்டார் அவர்களைச் சென்று காணுமாறு நண்பர் ஒருவர் கூறவே, ஆங்குச் சென்றனர். இருவரும் ஒருவரை யொருவர் கண்டறியார். நாட்டார் அவர்கள் இவர்களை அன்புடன் வரவேற்று முகமன் கூறினர். அப்போதுதான் வந்த 'செந்தமிழி'ல் இருவர் கட்டுரைகளும் வந்திருந்தன. ஒருவரது கட்டுரையை மற்றவர் படிக்க இருவரும் இன்புற்றனர். நாட்டாரவர்கள் இவர்களது பிறந்தநாட்குறிப்பைப் பார்த்து இவர்கட்குத் தமிழினால்தான் வாழ்க்கை சிறப்புறும் என்றும், தற்காலிகமாக ஓர் அலுவல் பார்க்கலாமென்னும் கூறி, தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தலைவர் த. வே உமாமகேசுரம் பிள்ளை அவர்க்குக் கடிதம் தந்தனர். எனவே, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் தொடர்பு இவர்கட்கு உண்டாயிற்று. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டுவிழாவில் எல். டி. சுவாமி கண்ணுப்பிள்ளை அவர்கள் தலைமையில் 'கல்லாடமும் அதன் காலமும்' என்னும் பொருள் பற்றி இவர்கள் பேசியது கேட்டு அறிஞர் பலரும் வியந்தனர். இளமையிலேயே இவர்கட்கிருந்த ஆராய்ச்சித்திறனைத் தலைவரவர்களும், சொற்பொழிவாளர்களாக வந்திருந்த பா. வே. மாணிக்கநாயக்கரவர்களும் 'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர்' என்ற அரியநூல் எழுதிய கனகசபைப் பிள்ளை அவர்களும் பிறரும் பாராட்டினர்.

பின்னர், இவர்கள் தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் தாலூக்கா அலுவலகத்தில் ஓர் எழுத்தராக நியமனம் பெற்றனர். அங்குத் தாசில்தாராக இருந்த தஞ்சை அழகிரிசாமிப்பிள்ளை அவர்களின் அன்பிற்குப் பாத்திரராக இவர்கள் ஒன்றரையாண்டு அலுவல் பார்த்துவந்தனர்.

குடந்தை நகர உயர்நிலைப்பள்ளியிலே தலைமைத் தமிழாசிரியராக விருந்த பாலசுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் விடுமுறையிலிருந்தபோது ஒருமாதம் அப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினர்.

நடுத்தரப் பள்ளியாக இருந்த குடந்தை வாணாதுறைப் பள்ளிக்கூடம் 1917 இல் உயர்நிலைப்பள்ளியாக ஆயிற்று. பண்டாரத்தார் அவர்களின் ஆசிரியரான பி. டி. நடேச சாஸ்திரிகள் அங்குத் தலைமையாசிரியராக இருந்தனர். அவ்வாண்டில் இவர்கள் அப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியராக நியமனம் பெற்றார்கள். இவர்கள் இப்பணியை 25 ஆண்டுகள் தொடர்ந்து சிறப்புடன் ஆற்றினார்கள். இக்காலப் பகுதியில் அப்பள்ளியில் தலைமையாசிரியர்களாக விருந்த பி. டி. நடேச சாஸ்திரிகள்,

டி. ஆர். ரங்கசாமி ஐயங்கார், கே. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், பள்ளிக்கூட நிர்வாகி வி. ஆர். சீனிவாச ஐயங்கார் ஆகியோரால் நன்கு மதிக்கப்பெற்று, மாணவர்களது பேரன்பிற்குப் பாத்திரராய் தமிழ்ப்புலமை நடத்தினர்கள். அப்பள்ளியிலும் குடந்தை நகரத்திலும் இவர்களுக்கு மிக்க செல்வாக்கு இருந்தது.

ஓய்வு நேரங்களில் பண்டாரத்தாரவர்கள் தமிழாராய்ச்சியும் கல்வெட்டாராய்ச்சியும் புரிந்துவந்தனர். அவர்களது ஆராய்ச்சிக்குக் குடந்தை அரசினர் கல்லூரியிலுள்ள சிறந்த நூல் நிலையம் மிகவும் பயன்படுவதாயிற்று அரசினர் கல்லூரியாதலின் அரசாங்கத்தாரால் வெளியிடப்பெறும் கல்வெட்டுத் தொகுதிகளும், கல்வெட்டிலாகா ஆண்டு அறிக்கைகளும், எபிகிராபிகா இண்டிகா போன்ற சரித்திர ஆராய்ச்சிப் பத்திரிகைகளும் அங்குத் தொகுத்து வைக்கப் பெற்றிருந்தன. அவற்றைப் பயில்வார் இவர்களையன்றி வேறொருவரும் அக்காலத்தில் அவ்வூரில் இல்லை. அக்காலத்தில் கல்வெட்டாராய்ச்சியில் இவர்களைப்போல் ஈடுபட்டிருந்த தஞ்சை பண்டித எல். உலகநாத பிள்ளை, திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர் ஆகியோர் இவர்கட்குச் சிறந்த நண்பர்கள். விடுமுறைக் காலங்களில் இந் நண்பர்கள் சந்தித்து ஆராய்ச்சியில் தாம்கண்ட உண்மைகளை ஒருவருக்கொருவர் கூறி மகிழ்வர். பிற்காலத்தில் தமிழவேள் என்றும் செந்தமிழ்ப் புரவலர் என்றும் சிறப்பிக்கப் பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் த. வே. உமாமகேசுரம் பிள்ளை அவர்கள் இவர்கட்கு அடிக்கடி கடிதம் எழுதி, 'தமிழ்ப் பொழி' லுக்குக் கட்டுரை எழுதுமாறு தூண்டுவார்கள். 'அடிக்கடி கடிதம் எழுதித் தொந்தரவு தருகின்றேன் என்பது பற்றிச் சினவாதிருக்க' என்றெல்லாம் எழுதுவார்கள். எனவே, இவர்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள், கரந்தைத்தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'தமிழ்ப்பொழிலி'ல் மலர்வனவாயின. மேலும், கல்வெட்டிலாகா அதிகாரிகளான இராமநாதையர், வேங்கடசுப்பையர் ஆகியோர் குடந்தை வட்டத்திலுள்ள கோயில்களில் கல்வெட்டுக்களைப் படியெடுக்க வருங்கால் இவர்களுடன் தொடர்பு கொள்வது உண்டு.

1921 ஆம் ஆண்டிலே பண்டாரத்தாரவர்களின் மனைவியார் எலி கடித்ததனால் நோய்வாய்ப்பட்டு இறந்தனர். அதற்கு முன்னரே இவர்களுடைய பெற்றோர்கள் காலமாகிவிட்டனர். எனவே, 1921—22ஆம் ஆண்டு தனிமையில் வாழ்ந்த நம் அறிஞரது வாழ்க்கை ஓர் இருண்ட பகுதியாகும். அப்போது அவர்கள் வாணுதுறை உயர்நிலைப்பள்ளியிலேயே தங்கி நோயினால் நலிவுற்றிருந்தனர். அவர்கள்பால் அன்புமிக்கு அணுக்கத்தொண்டர்களா

யிருந்த மாணவர்கள் அவர்கட்குப் பல்வகையாலும் உதவிபுரிந்தனர். அன்னோரில் குறிப்பிடத்தக்கவர் ஆர். கண்ணுசாமி,* டி. எம். வீரையன்,† காங்கேயன் பேட்டை இராமச்சந்திரன் ஆகியோராவர்.

பின்னர், பண்டாரத்தார் அவர்களின் நெருங்கிய உறவினர் டி. எஸ். சிவாநந்தம் பிள்ளையவர்களின் முயற்சியால் அவர்கட்கு இரண்டாம் திருமணம் நிகழ்ந்தது. சீகாழிவட்டம் எலத்தூரில் வாழ்ந்த சைவப்பெரியார் சதாசிவக் குருக்கள் அவர்களின் இரண்டாம் புதல்வியாகிய சின்னம்மாள் என்ற நலஞ்சான்ற பெண்மணியைப் பண்டாரத்தாரவர்கள் 1922 இல் (துந்துபி ஆனி 19௨) மணந்தார்கள். அதன் பின்னர் அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் படிப்படியாகத் தோன்றலாயின.

குடந்தை வாழ்க்கையில் அவர்கள் தமிழ்ப் பேரறிஞர்கள், குடந்தைக்கல்லூரிப் பேராசிரியர்கள் ஆகியோருடன் உறவு கொண்டும், தமிழ் ஆராய்ச்சி கல்வெட்டாராய்ச்சி புரிந்தும், தம் ஆராய்ச்சியில் கண்டவற்றைக் கட்டுரைகளாகவும் நூல் வடிவமாகவும் புனைந்தும் வந்தார்கள். அன்றியும் ஓய்வு கிடைத்த போதெல்லாம் குடந்தை வட்டத்திலுள்ள பல ஊர்களுக்குச் சென்று கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களைப் படியெடுத்தும், அவற்றை ஆராய்ந்து பத்திரிகைகளில் வெளியிட்டும் வந்தனர். அக்காலத்தே அவர்கட்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள் புரொபசர் சுந்தரராம ஐயர், பாஷாபாரத துரந்தரர், மகாமகோபாத்தியாய ம. வீ. இராமானுசாச்சாரியார், தமிழாசிரியர்கள் அ. பாலசுப்பிரமணியப் பிள்ளை, சீநிவாசய்யர், ஏ.எம். சடகோப ராமானுசாசாரி, எம். ஓ. எல், பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை, 'யதார்த்தவசனி' பத்திராதிபர் கோவிந்தசாமிப்பிள்ளை, சிவசேனாபதி ப. தி. சோ. குமாரசாமி செட்டியார், பண்டித செ. முத்துரத்தின முதலியார், குமாரவீரய்யர் முதலியோராவர்.

பண்டாரத்தாரவர்கள் 'செந்தமிழ்', 'தமிழ்ப்பொழில்' ஆகியவற்றில் வெளியிட்ட கட்டுரைகள் பலவாகும். அவற்றில், சோழன் கரிகாலன், சோழன் செங்கணான், அதிகமான் நெடுமானஞ்சி, திருவைகாவூர்க் கல்வெட்டுக்கள், கல்லாடமும் அதன் காலமும், முதல்கண்டராதித்த சோழர், உலாக்கொண்ட மூன்று சோழ மன்னர், கல்வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப் புலவர்கள்

---

* இவர் ஆவணப்பதிவுத் துறையில் அலுவல் பார்த்துக் காலஞ்சென்றுவிட்டனர்.

† இவர் திருச்சி மாவட்டம் பள்ளப்பட்டி உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியராகவுள்ளனர்.

வரலாறுகள் குறிப்பிடத்தக்கவைகளாம். குடந்தையில் அவர்கள் எழுதத் தொடங்கிய நூல்கள் கருணாகரத்தொண்டைமான், பாண்டியர் வரலாறு ஆகியவைவயே. கருணாகரத்தொண்டைமான் 1922—23 இல் முடிவெய்தியது. அத்தொண்டைமான் முதற் குலோத்துங்க சோழனின் படைத் தலைவர்களுள் ஒருவன். எனவே, தொண்டைமானது வரலாற்றை உட்படுத்தி முதற் குலோத்துங்க சோழன் என்ற ஆராய்ச்சி நூலைப் பின்னர் எழுதி முடித்தனர். பாண்டியர் வரலாறு 1922க்கு முன்னரே தொடங்கப் பெற்றது. 'முதற் குலோத்துங்க சோழன்' முதலில் 1930ஆம் ஆண்டில் வெளிவந்தது அப்போது அது இந்து, நவசக்தி, செந்தமிழ் போன்ற பத்திரிகைகளாலும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்ற பெரியோர்களாலும் பாராட்டப்பெற்றது. அதன் இரண்டாம் பதிப்பு 1933இலும் மூன்றாம் பதிப்பு 1941இலும் வெளிவந்தன. பாண்டியர் வரலாறு முதன் முதலாக 1940 ஜூலையில் அச்சிடப்பெற்றது. இரண்டாம் பதிப்பு 1950 அக்டோபரிலும் மூன்றாம் பதிப்பு 1956 ஜூலையிலும் வெளிவந்தன. இந்நூலைப்பற்றிச் செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்: "பண்டை இலக்கியங்களின் சான்றுகளையும் கல்வெட்டுக்களின் உண்மைகளையும் ஒப்பு நோக்கிப் பாண்டி மன்னரின் மெய்ச்சரிதையைத் தமிழ் மக்கள் அறிந்து கோடற்கு ஏற்ற கருவிநூல் இதுவேயாகும். நூலாசிரியர் தமிழ்ப்புலமை மிக்கவர்; கல்வெட்டுக்களை நுண்ணிதின் ஆய்ந்து உண்மை காண வல்லவர். கட்டுரை வன்மையும் கலை பயில் தெளிவுமுடைய இத் தமிழ்ப்புலவர் இந்நூலை இயற்றி உதவியது யாம் நன்றியுடன் போற்றத்தகும் நற்செயல். தமிழ் மக்கள் இதனைப் போற்றிப் பயன்கொள்வார்களாக." என்பது.

'முதற் குலோத்துங்கன்' சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் 'இன்டர்மீடியேட்' வகுப்பிற்குரிய பாடமாக்கப்பெற்றது. அது முதல் பண்டாரத்தார் அவர்கட்கு அதுகாறும் இருந்துவந்த பொருள் முட்டுப்பாடு நீங்கியது. வாணாதுறை உயர்நிலைப்பள்ளியில் (1917—1942) அவர்கள் தலைமைத் தமிழாசிரியராக இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றியபோது அவர்கட்குக் கிடைத்த ஊதியம் ரூ. 25க்குமேல் ரூ. 39 வரையில்தான். இதுபற்றி அவர்கள் கூறியது: "முதற் குலோத்துங்கன் கலிங்கத்தை வெற்றி கொண்டபோது ஆசிரியர் சயங்கொண்டார் அவன்மீது கலிங்கத்துப் பரணி பாடி மகிழ்வித்தார். மன்னர்பெருமானும் அந்நூல் அரங்கேற்றப்பெற்றபோது ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பொற்றேங்காயொன்றை உருட்டித் தந்து புலவர் பெருமானை மகிழ்வித்தான் என்பர். யான் அப்பேரரசனது வரலாற்றை

எழுதினேன். அதுமுதல் எனது வாழ்க்கையில் பொருள்முட்டுப் பாடு நீங்கியது. கடன் வாங்கவேண்டிய நிலையும் ஒழிந்தது'' என்பது.

இத்தகைய பெரும் புலவர் குறைந்த ஊதியத்துடன் ஓர் உயர்நிலைப்பள்ளியில் இருப்பது கண்டு அவர்களது நல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெரியோர்கள், அவர்கள் அதிக ஊதியம் கிடைக்கும் நிலையங்களுக்குச் செல்லவேண்டுமென்று விரும்பினர். வாய்ப்புக்கள் நேர்ந்தபோதெல்லாம் திருவையாற்று அரசர் கல்லூரி, திருப்பதி தமிழ்க்கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் (தமிழகராதி) ஆகிய இடங்களுக்கு விண்ணப்பம் அனுப்புமாறு தூண்டினர். பல காரணங்களால் பண்டாரத்தார் அவர்கள் மேற்கூறிய இடங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. இறுதியாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1942ஆம் ஆண்டில் சர். கூர்மா வேங்கடரெட்டி நாயுடு துணைவேந்தரா யிருந்தபோது அன்னார் பெயரால் அமைந்த தமிழாராய்ச்சிக் கழகம் விரிவுபடுத்தப்பெற்றது. அப்போது பண்டாரத்தார்பால் அன்பும் பெருமதிப்பும் உடைய கரந்தைத் தமிழவேள் அவர்கள் முன் எழுதிய குறிப்பாலும், புதுக்கோட்டை வழக்கறிஞர் நாகராச ஐயர் முதலிய பெருமக்களின் முயற்சியாலும் அவர்கட்கு மேற்கூறிய ஆராய்ச்சிக்கழகத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

அவ்வாண்டில் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் துணைவேந்தராயிருந்தார்கள். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் ஆராய்ச்சிக் கழகத் தலைவராக இருந்தார்கள். பண்டாரத்தாரவர்கள் தாம் பல்லாண்டுகளாக எழுதவேண்டுமென்று ஆவலுற்றிருந்த 'பிற்காலச் சோழர் வரலாற்'றைத் துணைவேந்தரவர்கள் அனுமதியுடன் ஆராய்ந்து எழுதத் தொடங்கினர்கள். ஸ்ரீ மீனாட்சி கல்லூரியின் தலைவராக இருந்த பேராசிரியர் K.A. நீலகண்ட சாஸ்திரியார் காலமுதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொகுத்து வைக்கப்பெற்றனவாகிய கல்வெட்டுப் பெருநூல்களும், கல்வெட்டிலாகா ஆண்டறிக்கைகளும், எபிகிராபிகா இன்டிகா, எபிகிராபிகா கர்னாடிகா போன்ற பத்திரிகைத் தொகுதிகளும் இவர்களது ஆராய்ச்சிக்கு உதவுவனவாயின. தமிழ்க் கல்வெட்டுக்களை ஆராய்வார்க்குத் தமிழிலக்கிய அறிவும் இன்றியமையாததே. ஆகவே, நம் புலவர்பெருமான் கல்வெட்டிலாகா அதிகாரிகளும் பிறரும் போதிய தமிழிலக்கியப் பயிற்சியின்றி இடர்ப்பட்ட இடங்களைக் கண்டறிந்து உண்மை காணும் பெற்றியராயினர்.

நம் பண்டாரத்தாரவர்கள் பல்கலைக் கழகப்பட்டம் பெறாதவர்கள், எனினும், பல்கலைக் கழகப் பட்டம் பெறுபவர்களுக்கு

இன்றியமையாத சிறந்த ஆராய்ச்சி நூல்களை இயற்றும் ஆற்ற லுடையவர்கள் என்பதனை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நன் குணர்ந்தமை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அவர்கள் பொரு ளுக்கு அல்லது பிறர் பாராட்டுதலைப் பெறுதற்கு ஆராய்பவர்கள் அல்லர். அவர்களது ஒரே குறிக்கோள் தமிழகத்தின் உண்மை வரலாறு வெளிவரவேண்டும் என்பதே. ஆகவே, பகலெல்லாம் ஆராய்ச்சிக் கழகத்தில் படித்துக் குறிப்பெடுப்பதுவும் வீடு திரும் பிய பின் மாலையிலும் இரவிலும் அவற்றை விரித்து எழுதுவதும் கடமையாகக் கொண்டிருந்தார்கள். இத்தகைய உழைப்பின் பயனாக, 'பிற்காலச் சோழர் சரித்திரம்' இரண்டு பகுதிகளாக எழுதப் பெற்று 1949ஆம் ஆண்டிற்கு முன்னதாக முடிவுற்றன. முதற் பகுதி (கி. பி. 846—1070) 1949ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலும் இரண்டாம் பகுதி (கி. பி. 1070—1279) 1951ஆம் ஆண்டு சனவரியிலும் வெளியாயின. அப்போது துணைவேந்தராக இருந்தவர்கள் உயர்திரு. டாக்டர் எஸ். ஜீ. மணவாளராமானுஜம், M. A., Ph. D. அவர்கள். பல்கலைக் கழகப் பதிவாளராக ச. சச் சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கள் இருந்தனர்.

பிற்காலச் சோழர் வரலாறு தமிழ்ப்புலவர் பெருமக்க ளுக்கும், புலவர் மாணவர்கட்கும், தமிழ் எம். ஏ. பயிலும் மாணவர்கட்கும், தமிழ் அறிஞர்க்கும், சரித்திரமாணவர்க்கும் பெருவிருந்தாயிற்று. அன்னோர் தம் நாட்டின் பழைய வரலாற்றை யுணர்ந்து பெருமிதம் கொண்டனர்; பண்டாரத்தார் அவர்களை ஆராய்ச்சியுலகில் ஒரு தலைசிறந்த மேதை எனக் கண்டனர். ஆராய்ச்சி செய்வார்க்கும், ஆராய்ச்சி நூல்கள் எழுதுவார்க்கும், சரித்திர நாவல்கள் எழுதும் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி போன்ற எழுத்தாளர்களுக்கும் 'பிற்காலச் சோழர் சரித்திரம்' பெரிதும் பயன்படுகின்றது.

பிற்காலச் சோழர் சரித்திரத்தின் மூன்றும் பகுதியாக 'சோழர் அரசிய'லைப்பற்றி எழுதத் தொடங்கினர் நம் பண்டாரத் தார். ஆனால், 'தமிழிலக்கிய வரலாறு' எழுதவேண்டும் என்று துணைவேந்தரவர்களின் ஆணைபிறந்தமையின் அம்முயற்சியை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று. தமிழிலக்கிய வரலாற்றில் இவர்கள் எழுத வேண்டிய பகுதி இருண்டகால மெனப்படும் கி.பி. 300 முதல் 600 முடியவுள்ள பகுதியாகும். தமிழ் வரலாறு என்னும் அரிய நூல் தந்த தஞ்சை K. S. சீநிவாசப் பிள்ளை அவர்கள் இப்பகுதியைப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை யென்று ஒரு சில வரிகளில் முடித்துவிட்டனர். அத்தகைய காலப் பகுதியைப் பண்டாரத்தார் அரிதின் ஆராய்ந்து சுமார் 150 பக்கங்களுள்ள ஒரு நூலாக அதனை இயற்றினர். அது

1955 ஆம் ஆண்டிலும் 1957 ஆம் ஆண்டிலும் ஆக இருமுறை பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றது.

பின்னர், பண்டாரத்தார் தமிழிலக்கிய வரலாற்றின் 13, 14, 15 ஆம் நூற்றுண்டுகளின் பகுதியை 1952—53 ஆம் ஆண்டில் எழுதி முடித்தனர். இந்நூலின் முதற் பதிப்பு 1955 ஏப்ரல் மாதத்திலும் இரண்டாம் பதிப்பு 1957 ஆகஸ்டிலும் வெளியாயின. தமிழிலக்கிய ,வரலாற்றின் இவ்விரண்டு பகுதிகளும் தமிழ் மாணவர்களாலும் தமிழ்ப் புலவர்களாலும் தமிழறிஞர்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்றன.

பண்டாரத்தார் அவர்கள் 1953 ஆம் ஆண்டில் 60 ஆண்டுகள் நிறைவுற்றமையின் பல்கலைக்கழக அலுவலினின்றும் ஓய்வு பெற்றனர். பின்னர், உயர்திரு. T. M. நாராயணசாமிப்பிள்ளையவர்கள் துணைவேந்தரானபோது பிற்காலச்சோழர் வரலாற்றின் மூன்றும் பகுதியை எழுதி முடிப்பதற்காகப் பண்டாரத்தாரவர்கள் மீண்டும் பல்கலைக் கழகத்தில் 1955 இல் நியமிக்கப் பெற்றனர். அப்பகுதி அவர்களால் எழுதப் பெற்று முடியும் நிலையிலுள்ளது. சென்ற 1959 சூலைமாத முதல் அவர்கள் நோய்வாய்ப்பட்டு நலிவுற்றமையின் அந்நூலில் மேலும் எழுதிச் சேர்க்க எண்ணிய பகுதிகள் சில இடம் பெற இயலாவாயின. இதற்கிடையில், தமிழகத்தின் தவக்குறைவால் தமிழன்னை ஏங்கும் வண்ணம் அப் புலவர்பெருமான் 1960 சனவரி 2 ஆம் நாள் சனியன்று காலை 5 மணியளவில் இம் மண்ணுலக வாழ்வை நீத்தமை தமிழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

பண்டாரத்தார்க்குத் தமிழகத்தின் பாராட்டுக்கள்

நமது 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' இயற்றிய அரியவரலாற்று நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வியந்து பாராட்டிய தமிழுலகம் அன்னாருக்குத் தன் நன்றியறிதலைக் காட்ட முன் வந்தது. முதலாவதாக 29-3-1956 இல் மதுரைத் திருவள்ளுவர் கழகம் கல்வெட்டுப் புலத்துறை முற்றிய கலைஞராகிய பண்டாரத்தார்க்குப் பொன்னாடை போர்த்தி, 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது. அப்போது தலைமை தாங்கிய செட்டி நாட்டரசர் இராசா சர். எம். ஏ. முத்தையாச் செட்டியார் அவர்கள் அறிஞர் பெருமானுக்குப் பொன்னாடையணிந்து அன்னாரது ஆராய்ச்சித் திறனைப் பாராட்டினர். பின்னர், கழகச்சார்பில் திருவாளர் ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் பண்டாரத்தார்க்கு 'ஆராய்ச்சிப் பேரறிஞர்,

என்ற பட்டம் பொறிக்கப் பெற்ற பொற்பதக்கத்தை வழங்கி அவரது வரலாற்றாராய்ச்சித் திறனை விளக்கினர்.

சென்னை எழுத்தாளர் சங்கத்தின் நான்காம் ஆண்டுவிழா 7-4-1956 இல் நடைபெற்றபோது சீரிய முறையில் தமிழ்த் தொண்டாற்றிய பண்டாரத்தார்க்கு அச்சங்கச் சார்பில் கல்வி யமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவர்களால் கேடயம் வழங்கப் பெற்றது அப்போது அறிஞரது தமிழ்த்தொண்டின் திறனைப் பாராட்டி விழாவிற்குத் தலைமை தாங்கிய மகாதேவன் அவர்களும், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர் களும், பிறரும் பேசினர்.

தலவரலாறுகளை வரலாற்று முறையில் முதன் முதலில் எழுதிய பெருமை பண்டாரத்தார் அவர்கட்கே உரியது என லாம். நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள செம்பியன்மாதேவி என்ற ஊரிலுள்ள சிவாலயத்தின் வரலாற்றைக் கல்வெட்டுக் களின் துணைகொண்டு அவர்கள் எழுதினார்கள். அக்கோயிலின் அறங்காப்பாளர் திருவாளர் எஸ். ரங்கராமானுஜ நாயுடு, பி. ஏ., இறைபணியாளர் திருவாளர் T. நாகராசன், B. Sc. ஆகிய இருவரது விருப்பத்தின்படி அஃது எழுதப்பெற்றது. அவ்வூரின் கண் 13-5-59 இல் நிகழ்ந்த குடமுழுக்கின்போது அந்நூல் வெளியிடப் பெற்றது. வெளியீட்டுவிழாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் உயர்திரு. T. M. நாராயண சாமிப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். அதுகாலை அறநிலையப் பாதுகாப்பு இலாகா உதவி ஆணையர் உயர்திரு. ஏ. சர்க்கரை சேர்வை அவர்கள் ஆசிரியர் பண்டாரத்தார்க்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர். தலைவரவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளர் உயர்திரு. T. D. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் ஆசிரியரவர்களின் ஆராய்ச்சித்திறனையும் குணநலனையும் புகழ்ந்து பேசினர்.

பண்டாரத்தாரவர்களின் ஆராய்ச்சி வன்மையினை உணர்ந்த தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் அவர்களைத் தமிழ்க்கலைக் களஞ்சியப் பதிப்பாசிரியர் குழுவில் ஒருவராகத் தேர்ந்து கொண்டனர். கரந்தைத் 'தமிழ்ப் பொழிலி'ன் இதழாசிரியர் குழுவிலும் அவர்கள் இருந்து வந்துள்ளார்கள்.

பண்டாரத்தார் குணச்சிறப்பு

பண்டாரத்தாரவர்களின் குணநலன்களில் முதலாவதாகக் குறிக்கத்தக்கது அவர்களது ஆடம்பரமற்ற சிவபத்தியாகும். சைவசமய குரவர்களாகிய நால்வரிடமும் அன்னாருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. வாழ்க்கையின் முற்பகுதியிலே திருமுறைகளில்

பெரியபுராணம் ஓதிய பின்னரே உண்பது வழக்கம். 1928 ஆம் ஆண்டுமுதல் தாம் இறக்கும் வரை தமது பிறந்த ஊராகிய திருப்புறம்பயத் திருக்கோயிலில் சமயாசாரியர் நால்வர்க்கும் குருபூசை நடத்திவந்தார்கள். அப்பணி என்றும் தம் குடும்பத் தாரால் தொடர்ந்து நிகழவும் செய்துள்ளார்கள்.

பண்டாரத்தாரவர்கள் ஒரு சிறந்த ஆசிரியர். வாணுதுறை உயர்நிலைப் பள்ளியிலே 25 ஆண்டுகள் தலைமைத்தமிழாசிரியராக இருந்தபோது மாணவர்களுடைய பேரன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராயிருந்தனர். மாணவர்கள் பொதுவாக இலக்கண இலக்கியம் கற்றனரேனும் அவர்களது வரலாற்று ஆராய்ச்சியி னாலும் அன்னோர் ஈர்க்கப் பெறுதல் உண்டு. அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராயிருந்து காலஞ் சென்ற எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களும், கல்வெட்டு ஆராய்ச்சியாளர் தி. நா. சுப்பிரமணியம் அவர்களும் பண்டாரத் தாரின் மாணவர்களேயாவர்.

விரைவாகச் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பண்டாரத்தா ரவர்கட்கு உண்டு. ஆராய்ச்சியில் ஈடுபட்டபின் அத்துறையில் கருத்துச் செலுத்தவில்லையெனினும், அன்னார் இளமையில் இயற்றிய பாடல்கள் பலவாம்.

ஆராய்ச்சியிலே தாம் கண்டனவற்றைப் பண்டாரத்தா ரவர்கள் விரைந்து வெளியிடுவதில்லை. தக்க சான்றுகளை மேன் மேலும் கண்டறிந்து தமது முடிவு அசைக்க முடியாதது என்று உணர்ந்தபின்னரே அதனை வெளியிடுவர். அவர்களது ஆராய்ச்சி ஆராய்ச்சிக்காகவே செய்யப்பெற்றது. தந்நலங் கருதித் தம் நூல்களின் எண்ணிக்கையைப் பெருக்கிப் பொருளீட்டும் முயற்சியை அவர்கள் என்றும் எண்ணியதில்லை அவர்கள் ஆயுள் முழுதும் ஆராய்ச்சியிலேயே இடைவிடாது ஈடுபட்டுத் தமிழக வரலாற்றின் ஒரு பகுதியை ஒப்பற்ற வகையில் ஆக்கித் தந்தார்கள்.

பண்டாரத்தாரின் உரைநடை ஒருதனிப்பட்ட நடையாகும். எளிமையும் இனிமையும் வாய்ந்த அத்தமிழ் நடையில் அன்னார் எழுதிய ஆராய்ச்சிகள் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் மதிக்கத்தக்க அருமையுடையன வாயினும் உயர்நிலைப்பள்ளி மாணவரும் அறிந்து இன்புறுதற்கேற்ற எளிய இனிய நடையில் அமைந்தனவாகும். சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு ஆகிய வரலாற்று நூல்கள் ஆற்றொழுக்காகக் கதைபோல் அமைந்துள்ளன. செய்திகள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கும். வெற்றுரைகளே அவர்கள் நூல்களில் காணப்படுவ

தில்லை. கொள்கைபற்றியோ, சமயச் சார்புபற்றியோ அன்றி விருப்பு வெறுப்பினாலோ ஆராய்ச்சியில் நடுநிலை திறம்புபவர் பண்டாரத்தாரல்லர்.

பண்டாரத்தாரவர்களுடன் உரையாடியவர்கள் அன்னாரது உரையாடற்றிறனை நன்கு உணர்வர். அவர்களது பேச்சு ஆராய்ச்சியின் சாரமாகவே இருக்கும். உரையாடுபவர் இடையில் எழுந்து செல்ல நினையார்; பிரிந்து செல்லும்போது தாம் அதுகாறும் அறியாத சில செய்திகளையறிந்தே செல்லுவார். எனவே, அவர்களுடன் உரையாடுவதே ஒருவகைக் கல்வியாகும்.

படித்தலே பண்டாரத்தார்க்குப் பொழுது போக்காகும். எத்தகைய நூலையும் விரைவில் நன்குபடித்து முடித்துவிடுவது அன்னார் வழக்கம். அண்ணாமலைப் பல்கலைக்கழக நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்தியவர்களில் அவர்கள் ஒருவர் என்பது அறிஞர் கருத்து. பல்கலைக்கழகத்தின் டாக்டர் சர். சி. பி. இராமசாமி ஐயர் நூல்நிலையக் கட்டிடம் அண்மையில் திறக்கப்பெற்றபோது வெளிவந்த வெளியீட்டில் புதுக்கோட்டை வழக்கறிஞர் உயர்திரு. கே. நாகராஜ ஐயர், பி. ஏ., பி., எல். அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் பண்டாரத்தாரவர்களின் படிப்பார்வத்தை விளக்கியுள்ளமை அறிந்து மகிழற்பாற்று.

"Full advantage is taken of the facilities provided by those members of the staff who are devoted to disinterring the treasuers of the past. Valuable books have been written, such as for example, the History of the later Cholas, by Sadasiva pandarathar, and the History of Tamil literature, by the same author. Pandarathar is a researcher of the purest vintage and he reminds one of those Cambridge Dons, Wordsworth's "Venerable Doctors" who

"Led in abstemiousness astudious life;
When in forlorn and naked chambers cooped
And crowded, o'er the ponderous look they hung
Like cater pillars eating out their way
In silence"

பண்டாரத்தவர்கள் செய்தித்தாள்களை நாள்தோறும் முறையாகப் படித்து அரசியல் செய்திகளைக் கேட்போர் வியக்கும் வண்ணம் உரைப்பார்கள். நீதிக் கட்சி ஆண்ட வரலாறு, காங்கிரஸ்மகாசபையின் வளர்ச்சி முதலியவற்றைச் சரித்திர ஆசிரியர்களும் விரும்பிக் கேட்குமாறு இயம்புவார்கள். அவர்கட்கு அரசியலில் தனிப்பட்ட கொள்கை உண்டு. பொது

வாகக் கூறுமிடத்து, அவர்கள் தமிழுணர்ச்சி வாய்ந்த தமிழர்; தமிழின் வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டவர்கள்.

வரலாற்றுராய்ச்சி, தமிழாராய்ச்சியில் தாம் கண்ட உண்மைகளை ஒருவகைக் குறிப்பும் கையிலில்லாது நீண்ட நேரம் அவர்கள் சொற்பொழிவாற்றுவது வியப்பாயிருக்கும். பண்டாரத்தார் சொற்பொழிவு என்றால் அதில் பல புதிய செய்திகள் நிறைந்திருக்கும் என்பது அறிஞர் துணிபாகும்.

இத்தகைய அருங் குணங்கள் வாய்ந்த அறிஞர்பிரான் எளிமையே உருவமாகக் கொண்டு ஆடம்பரமின்றி வாழ்ந்து வந்தனர். சிறிது கற்றவரும் தாம் எல்லாமறிந்தவராகக் காட்டும் இக்காலத்தே, அவ்வாராய்ச்சிக் கடல் சுயவிளம்பரமின்றியே இருந்து வந்தனர். குறைகுடந்தானே கூத்தாடும்.?

பண்டாரத்தாரின் ஒரேபுதல்வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராகப் பணிபுரிபவரும் ஆகிய ச. திருஞானசம்பந்தன் தந்தையாரிடம் கல்வெட்டாராய்ச்சியில் பயிற்சி பெற்றவர். அன்னார் தந்தையாரின் ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல் கடனாகும்.

தமிழாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி செய்வோர்க்குப் பண்டாரத்தாரின் நூல்கள் உறுதுணையாகும். அவரது ஆராய்ச்சி முறையை அவருடைய நூல்கள் வாயிலாக உணர்ந்து அத்துறையில் ஈடுபடுதல் ஆராய்ச்சி மாணவர் கடமையாகும். தமிழ்நாட்டில் பண்டாரத்தார் மரபு நீடு வாழ்க.

திரு. டி. வி. சதாசிவபண்டாரத்தார் மறைவுக்கு

இரங்கற் செய்திகள்

திரு. டி. வி. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் இறையடி நிழல் எய்திய செய்தி அறிந்து நமது பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு தமது இரங்கலை அவர்கள் குடும்பத்தார்க்கும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

பதிவாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் மறைவு கேட்டு மிகவும் வருந்துகிறேன். அன்னார் ஆன்மா இறைவன் துணைத்தாட்கீழ் என்றும் இருந்து நிறையின்பம் எய்த எல்லாம் வல்ல திருவருளை வழுத்துகிறேன்.

கரு. முத்துதியாகராசர், மதுரை.

திருஞானசம்பந்தம் அவர்களுக்கு, வணக்கம்.

தந்தையார் அவர்களின் பிரிவுச் செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது. பெரிதும் வருந்துகிறேன். என் செய்வது? தயவு செய்து தாங்கள் முதலில் ஆறுதல் பெற்றுப் பிறகு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் நல்லாறுதல் கூற வேண்டிக்கொள்ளுகிறேன்.

கி. ஆ. பெ. விசுவநாதம்.

கல்வெட்டு ஆராய்ச்சி அதன் முதல்வரை இழந்துவிட்டது. ஆராய்ச்சி அறிஞர் தங்கள் அண்ணலை இழந்துவிட்டனர். தமிழ் ஆராய்ச்சி என்னும் தாய் தம் செல்வ மகனை இழந்துவிட்டாள். உலகம், எதைக்கேட்டாலும் சொல்லவல்ல பேரறிஞரை இழந்துவிட்டது.

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்.

எனது அரியதோர் செந்தமிழ்ச் செம்மல், வரலாற்றுத் துறையில் நல்வழி வகுத்த நல்லவராம், பண்டாரத்தாரை இழந்தது, மிகப் பெரிதும் துன்பத்தையே தருகிறது.

மு. இராசாக்கண்ணனுர், மலேயா.

மொண்டார மாணவர்கள்
பருகுவதோர் முத்தமிழின் பொய்கை! யாவும்
கொண்டாரும் கொளவிரும்பும்
அருங்குணங்கள் தமிழ்ப்பற்றும் கொண்ட மேலோர்
அன்பினொடு குழைந்துவர இனிது பேசும்
பண்டாரத் தார்போன்றார்
பண்டில்லை இன்றில்லை இனியும் அஃதே.

'குயில்'

பண்டாரத் தாரென்று பாவலரும் நாவலரும்
கண்டாரத் தார்ணியிற் கற்றவர்க்கே - தண்டாரத்
தின்புதல்வர் நட்பயலார் ஏங்கத் திருக்கூத்தின்
அன்புதல்வ நல்கடியுற் றார்.

நல்லெழுத்துச் சொல்லழுத்தம் நல்லமுடி வாராய்ச்சிக்
கல்லெழுத்தும் உச்சியயன் கையெழுத்தும் - பொல்லெழுத்தாய்
பெற்ற சதாசிவனும் போசான் போலுலகில்
உற்ற புலவர் ஆர்? ஓது.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், தருமையாதீனம்.

திருக்கோயிற் கல்வெட்டைப் படித்தாய்ந்தே,
தெள்ளுதமிழ் மொழியினிலே பெயர்த்தெழுதி,
"இருண்டகாலம்" போன்ற நூலாலே,
இன்றமிழ் அறிஞரினைக் கவர்ந்தேதான்
உருவிற்கெளி தானசதா சிவப்பெரியோய்!
உண்மைவடி விறைவனிடம் விரைந்தாயோ?
விருப்புடனே உள்ளவரார் இனியிங்கே?
திருக்கோயிற் கல்வெட்டை எழுதிடவே!

பொ. திருஞானம், வெண்பாவூர்.

மற்றும், கீழ்க்காணும் மன்றங்களும், பெருமக்களும், அன்பர்களும், ஆகியபலரும் கடிதங்கள் வாயிலாகவும், கம்பி வழியாகவும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. அவற்றுள் சில வருமாறு:

எஸ். சுயம்பிரகாசம், கரந்தைத் தமிழ்ச் சங்கம்; கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்கம்; தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை; மதுரை திருவள்ளுவர் கழகம்; மயிலை சிவ. முத்து, தலைவர், மாணவர் மன்றம், சென்னை; திருக்குறள் கழகம், குகை, சேலம்; திருக்குறள் கழகம், புதுக்கோட்டை; இளங்கோ மன்றம், தியாகராயர் கல்லூரி, மதுரை; மாதவி மன்றம், மேலப்பாளையம்; தமிழ்ப் பேரவை, புதுக்கோட்டை; மாணவர் அருள் நெறி மன்றம் பேரூர், கோவை; ஈ. வே. ராமசாமிப் பெரியார்; ச. சச்சிதானந்தம் பிள்ளை; சம்பந்த சரணாலய தம்பிரான், கோவை; டாக்டர். எம் ஏ. துரையரங்கனார், மதுரை; டாக்டர். வ. சுப. மாணிக்கம் காரைக்குடி; எஸ். இராமச்சந்திர பத்தர், பி. ஏ., துணைத்தண்டலாளர், மதுரை; கே. ஆர். சம்பந்தம், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்; டாக்டர். பி. திருஞானசம்பந்தம், கோவை; எஸ்.பி. தியாகராசன், Blitz, Bombay; சோம. லெ; டாக்டர் அப்பர் சுந்தரம், தஞ்சை; எஸ். ஜி. மணவாள இராமாநுசம், M. A., Phd., டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, துணைவேந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்; டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார். மயிலை. சீனி. வேங்கடசாமி; வித்துவான் வெங்கடராமையா திருப்பனந்தாள்; வித்துவான், ந. சேதுரகுநாதன்; ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை; இ. மு. சுப்பிரமணியபிள்ளை; மற்றும் பலர்.

மிளகு பயறான கதை

[திரு. சு. அ. இராமசாமிப் புலவர்]

மலையாள நாட்டிலே மிளகு கொண்ட ஒரு வேளாளன் வெளியிடங்கட்குச் சென்று வாணிகஞ் செய்யவேண்டும் என்று முடிவு செய்தான். எருதுகளின்மேல் மிளகுப்பொதிகளை ஏற்றிக் கொண்டு பயணமானான்.

ஆம்பிராவதிக் கரையில் உள்ள தென்கரை நாட்டில் கோவில் உள்ள ஒரு காட்டிலே வந்து தங்கினான். அக்கோவிலில் எழுந்தருளிய கடவுள் ஒரு முதிய அந்தணனாக வடிவங்கொண்டு வணிகன் முன்பு தோன்றினார். வணிகனைப் பார்த்துச், "சிறிது மிளகு வேண்டும்" என்று கேட்டார். மிளகு கொடுக்க மனமில்லாத அந்தணன், "இம்மூட்டைகளில் உள்ளவை பயறு" என்று கூறினன். "அப்படியே ஆகுக" என்று கூறி விட்டுக் கிழ அந்தணனாக வந்த கடவுள் மறைந்து போயினர். வணிகன் திருவாரூர் போய்ச் சேர்ந்தான். அங்குள்ள வணிகர்களிடத்தில் மிளகை விலைபேசினான். தொகையைப் பெற்றுக் கொண்டு மிளகை அவிழ்த்துக் கொட்டினான். மிளகு முழுவதும் பயறாக இருந்தது. வணிகர்கள் இவன் புரட்டன் என்று சினங் கொண்டு புடைக்கத் தொடங்கினார்கள். அப்பொழுது முன் தோன்றியவாறே கடவுள் முதிய அந்தணராகத் தோன்றித், "தென்கரை நாட்டிற் சிறிது மிளகு கேட்டபொழுது 'இவை பயற்று மூட்டை' என்று சொன்னீரே?" என்று கேட்டனர்.

வணிகன் திகைத்தான். முன்பு தோன்றியவரும் இப்பொழுது தோன்றியிருப்பவரும் சிவபெருமானே என்று துணிவு கொண்டான். "மிளகைப் பயறாகச் செய்த தாங்களே இதனைத் திரும்பவும் மிளகாகச் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். "தென்கரை நாட்டில் இடைச் சிறுவனிட்ட பந்தல் எமது கோயில். அதனைக் கற்பணியாகச் செய்வாயாக" என்று கூறி மறைந்தருளினர். பயறு முழுவதும் மிளகாக மாறிவிட்டது. [அப்பிர மேயர் தலபுராணத்திற் காணப்படும் இச்செய்தியைக் கொங்குமண்டல சதக உரைகாரர் தமது உரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.]

"அவ்விடத்திலுறையும்பதத்துமுன(து) அருகுவந்துமிள காசையால்
செவ்வி பெற்றமெய் வருந்தி நின்றது பெறாது போனகுறி தேறவாய்
பவ்வ மற்றநெறி வணிக னேமமது பணிசெ யென்றுகுவி பயறெலாம்
வெவ்வி யற்கைபெறு மிளகு செய்தருளி ஏகி னார்பரம வெளியிலே."

நக்கீரர்

[திரு. சோ. ந. கந்தசாமி, பி. ஏ. (ஆனர்சு)]

(செல்வி-சிலம்பு ௩௪, பரல்-டு, ௨௩௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தைப் புரப்பதற்காகவே பிறந்த அடியாருட் பலர் வரைவயர்ந்து நிறையின்பம் உட்கொண்ட நீர்மையராவர். இல்லறம் துறவறம் இரண்டையும் வகுத்த வள்ளுவப் பெருந்தகையும் நமக்குத் துணையாக உள்ளார். எனவே, நக்கீரர் இல்லறத்தை இனிது நடத்துதற்காகப் பொருட்பரிசிலை நாடிப் புரவலரைப் பாடினர். முதுமை கதுவக் கதுவ மறுமை நினைவால் உந்தப் பெற்ற நக்கீரனர் அருட்பரிசை அடைதற்காகத் தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானின் சேவடி படர்ந்து பெறலரும் பரிசில் எய்தினர். தாம்பெற்ற பேற்றைப் பெறுதற்கு அவாவும் புலவனுக்கு அது பெறுமாற்றைப் புலப்படுத்துவதற்குத் திருமுருகாற்றுப் படையினை அருளினர். எனவே, இளமைக்கும் முதுமைக்கும் இடையில் எத்துணையோ கருத்து வேறுபாடுகள் பிறக்கலாம். இவற்றை மனத்தில் இருத்தினல் திருமுருகாற்றுப்படை ஆசிரியரும் நெடுநல்வாடை ஆசிரியரும் ஒருவர் என்பது தெளிவாகும்.

புராணச் செய்திகள் திருமுருகாற்றுப்படையில் வருதல்

6. முடிபாகத் திரு. பிள்ளை அவர்கள் திருமுருகாற்றுப் படையில் புராணக் கருத்துக்கள் வருதலைக் காட்டிப் பிற்காலத்தது என்பர். இக்கருத்தைச் சிறிது எண்ணிப் பார்ப்போம். முருகவேள் சூரனைக் கொன்றான் என்னும் புராணக் கருத்து,

> "பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
> சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்."

எனத் திருமுகாற்றுப் படையில் வருதல் காணலாம். இக் கருத்தே,

> "வெண்டிரைப் பரப்பில் கடுஞ்சூர் கொன்ற
> பைம்பூட் சேஎய்." (பெருபாண் சகுள-சகுஅ)

> "......மாக்கடல் முன்னி
> அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
> சூருடை முழுமுதல் தடிந்த......விறல்வேள்." (பதிற்று-கக)

> "சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்." (அகம்-௫௯)

"மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லான்." (கலித்-௧0௪)

"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு
மாய அவுணர் மருங்கறத் தபுத்தவேல்." (பரி-௫)

எனச் சங்க இலக்கியங்களில் பயின்று வருதல் காண்க. திருமுருகாற்றுப் படையில் சூரரமகளிரும், பிணந்தின்று துணங்கை யாடும் பேய்களும் பேசப் பெறுதல் பிற சங்கப் பாக்களிலும்,

"அணங்குடைச் சிலம்பின் கவிரம்,
பேரிய உருகெழு கவாஅன் ஏர்மலர்
நிறைசுனை உறையும் சூர்மகள்." (அகம்-௧௧௮)

"பலிபெறு வியன்களம் மலிய ஏற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந்தாடும்
துணங்கையம் பூதம்." (பெரும்பாண்-௨௩௫-௫)

"நிணம் வாய்ப் பெய்த பேய்மகளிர்
இணையொலியிமிழ் துணங்கை." (மதுரைக்-௨௫-௬)

என்று இயம்பப்பெறுதல் அறியலாம். முருகற்கு யானையூர்தி, மயிலூர்தி முதலியன உரியவெனும் பழங்கருத்து முருகாற்றுப் படை மொழியும். இப்புராணக் கருத்தினை,

"சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு." (பதிற்று-௧௧)

"பிணிமுக வூர்தி ஒண்செய் யோன்." (புறம்-௫௬)

"பிணிமுகம் உளப்படப் பிறவு மேந்தி." (பரி: அ-௧0௧)

"பல்பொலி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஒடியா விழவின் நெடியோன்." (அகம்-௧௪௯)

"சாறுகொள் துறக்கத் தவளொடு
மாறுகொள் வது போலும் மயிற்கொடி." (பரி-௧௯: ௬-எ)

"மையிரு நூற் றிமையுண் கண் மான்மறிதோள் மணந்தஞான்று."
(பரி-௯: அ)

எனவரும் சங்கநூற்பகுதிகள் விளக்குதல் காண்க.

திருமால், சிவன், இந்திரன், நான்முகன் ஆகிய நால்வரும் முருகாற்றுப்படையில் தோற்றமளிக்கின்றனர். விநாயகரைப் பற்றி இந்நூலிலும் பிற சங்கப் பாக்களிலும் இயம்பப்பெறவில்லை. இனி, இந்நால்வரும்,

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல்." (முல்லை: ௧-௩)

"மரஞ்செல மிதித்த மாஅல்." (அகம்-ருக)

"வண்டூது பொலிதார்த் திருஞெமர் அகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரல் துழாஅய்
அலங்கற் செல்வன்." (பதிற்று-நூக)

"நீனிற வுருவின் நேமியோன்." (புறம்-ருஅ)

"அஞ்சன உருவன்." (புறம்-கஎச)

"முக்கட் செல்வர் நகர்." (புறம்-சு)

"நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்." (அகம்-கஅசு)

"ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்." (புறம்-ருரு)

"நீலமணி மிடற் றொருவன் போல." (புறம்-கூக)

"பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற்றணி." (கலி-க0ரு)

"அணங்குடை வச்சிரத்தோன் ஆயிரம்கண்." (கலி-கரு0)

"வச்சிரத் தடக்கை நெடியோன் கோயில்." (புறம்-உசக)

"நீனிற வுருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த் தாமரை."
(பெரும்பாண்: ச0உ-ச)

எனச் சங்கத்துச் சான்றோர்தம் பாக்களில் காட்சி தருதலைக் காணலாம். மேழகம் றூறி வேரி நிறைத்து வெறியாட் டெடுத்தல் முருகாற்றுப் படையிலும் பிற சங்கச் செய்யுட் களிலும் வழங்கப் பெறுதல் அறிஞர் உலகம் அறிந்ததொன்றும்.

எனவே, இதுகாறும் இயம்பியவாற்றான் புராணக்கருத்துக் கள் திருமுருகாற்றுப் படையிலும் பிறசங்க இலக்கியங்களிலும் பேசப்பெறுதல் கண்டோம். இனி, முருகன் இயற்கை வடிவாக வயங்கும் எழிற் காட்சியை,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி."

"கைபுனை நியற்றாக் கவின்பெறு வனப்பு."

"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்."

எனவரும் அடிகளில் கவின் செறியக் காட்டுகின்றார். கோயில் போந்து வழிபட இயலாராய் "யாம் எம் இல்லத்தின் உள்ளிருந்தே இயற்கையாகிய இறைவனை எண்ணி ஏத்துவேம்" என்னும் கோட்பாட்டினர்க்கும் முருகப்பெருமான் தண்ணருள் பாலிக்கும் தன்மையன் என்னும் உயரிய கருத்தினை,

"வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே."

என்னும் அடிகளில் தெளிவுறுத்துகின்றார்.

கந்துவில் முருகன் உறைதலான் கந்தன் எனப்பட்டான். இதனை,

"மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்." (முருகு.)

"அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ
அம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்." (பட்டினப்.)

எனவரும் பகுதிகள் உணர்த்தும்.

இனி, முருகாற்றுப் படையுள் முதலில் திருப்பரங்குன்றத்துச் சிறப்பினைக் குறிக்கின்றார். பரங்குன்றின் சிறப்பு பரம்பொருளின் சிறப்பால் பிறப்பது. பரங்குன்றின் பெருமையினைப் பரிபாடல்கள் பேசுகின்றன. பிற சங்க நூல்களில் ஒன்றாகிய அகநானூற்றில்,

"முருகன் தண்பரங்குன்றம்." (அகம் - ருக)

"கூடற் குடாஅது,
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஒடியா விழவின் நெடியோன் குன்றம்." (அகம் - கசக)

எனப் புகழப் பெறுதல் காணலம்.

நக்கீரர் கூறும் இரண்டாவது திருப்பதியாகிய சீரலைவாய்,

"திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகு சேஎய்."
(அகம் - உசசு)

"வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறை." (புறம் - ருரு)

எனச் சங்கப் பாக்களில் சால்புறப் பெறுதல் அறிதற்பாலது. ஆற்றுப்படையுட்போந்த ஆவினன்குடி ஆவியர்கள் ஆண்டமையால் அப்பெயர் அடைந்ததென்பதும்; அது வையாவிக் கோப்பெரும்பேகனால் ஆளப்பெற்றபின் 'வையாபுரி' எனப் பெயர்

பெற்றது என்பதும் ஆராய்ச்சி உலகம் அறிந்தவையாம். இம் மலையினை,

"முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட்டி யானைப் பொதினி." (அகம் - ௧ : ௩ - ௪)

"முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி." (அகம் - ௬௧ : ௧௫ - ௧௬)

எனவரும் அகநானூற்றுப் பகுதிகள் பரவுதல் காண்க.

இந் நூலுள் நான்காவதாக நவிலப்பெறும் 'ஏரகத்தை' மலைநாட்டகத்தொரு திருப்பதி என்பாரும் சாமிமலையே என்று சாதிப்பாரும் உளர். சிலப்பதிகாரம் இப்பதியின் சிறப்பைச் செப்புகின்றது. ஐந்தாம் பகுதியாகத் திகழும் "குன்றுதோறாடல்" முருகனின் படை வீடெனப் பகருநரும் உளர். குன்று நிலம் எங்கும் நின்று நிலவும் முருகனைக் குறிஞ்சிக் கிழவன் எனப் புலவர் கூட்டம் புகலும். முதன் மக்கள் மலையில் வாழ்ந்தனர் என்றும், அக்காலத்தே அவர்கள் முருகனை இறைஞ்சினர் என்றும் அறிஞர் உலகம் அறிவிக்கும். உயரிய பரம்பொருளை உயரிய இடத்தில் வைத்து வணங்கும் முறை உவப்பினைப் பயப்பதாம். தொல்காப்பியனாரும், "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்று இயம்பிப் போந்தனர். நக்கீரர் கூறும் "பழமுதிர் சோலைமலை" அழகர் கோயிலைக் குறிக்கும் என்றும்; திருமாலிருஞ்சோலை மலையினைக் குறிக்குமென்றும் கூறுவர். மாலிருஞ்சோலையும் பழமுதிர் சோலையும் வேறுதல் வேண்டும். பரிபாடலில் 'மாலிருஞ் சோலை' தன்பெயர்க்கேற்பத் திருமாலின் திவ்விய தேசமாகப் பேசப்படுகின்றது.

எனவே, இதுகாறும் எழுதியவாற்றால் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் திருமுருகாற்றுப்படையினைப் பிற்காலத்திற்கு இழுத்துவரும் முயற்சி அயர்ச்சியடைதல் காண்க.

இனி, கி. பி. 1942—43இல் தாம் "செந்தமிழில்" வெளியிட்ட கட்டுரையில் முருகு பாடிய நக்கீரர் கி. பி. 450 இல் வாழ்ந்தவர்என்று கூர்ந்துரைத்த வையாபுரிப் பிள்ளை அவர்கள், 1952இல் அக்கட்டுரையினைத் தம் "இலக்கிய தீபம்" என்ற நூலில் இணைத்து வெளியிடுங்கால் காரணம் கழறாது அவ்வடிகளை ஒருவி, அந்நக்கீரரே 11 ஆம் திருமுறை நூல்களைப் பாடியவரென்றும்; அவர் கி. பி. 850 இல் வாழ்ந்தவரென்றும் எழுதத் துணிந்தனர்! வள்ளுவப் பெருந்தகை 'ஞானவெட்டியான்' யாத்ததும் சங்ககாலக்கபிலர் 'கபிலரகவல்' பாடியதும், சங்ககால ஔவையார் 'விநாயகரகவல்' விளம்பியதும் மெய்ம்மையே யாமாகில் முருகு

கோரஸ்: அரசே கேள். உன் அன்பு அணைப்பிலும் அறிவு ஆற்றலினாலும் எளியோர்களாகிய நாங்கள் நன்கு வாழ்ந்து வந்தோம். இன்று நாடு கிடக்கும் நிலையிலிருந்து மீட்டு அமைதியை நாட்ட உங்களைத்தான் நம்புகிறோம்.

யோகீத்தாள்: உங்களை வேண்டுகிறேன். ஏன் கிரியனை அவ்வாறு வெறுக்கிறீர்கள்?

ஒதிபன்: சொல்கிறேன். இந்த நன்மக்களினும் நீ எனக்கு மேலானவள். கிரியன் எனக்கு எதிராக இந்தச் சூழ்ச்சியைச் செய்துள்ளான்.

யோகத்தாள்: சூழ்ச்சி எது!

ஒதிபன்: இலேயனைக் கொன்றது நான்தான் என்கிறான்.

யோகத்தாள்: தானே அறிந்ததாகச் சொல்கிறானா? அன்றிப் பிறர் சொல்வதாகச் சொல்கிறானா.

ஒதிபன்: அதில்தான் அவனுடைய திறமை இருக்கிறது. தான் சொல்வதாக இல்லாமல் ஒரு புலவன் வாயில் வைத்துச் சொல்லுவிக்கிறான்.

யோகத்தாள்: அப்படியாயின் உடனே அதைப் போக்க முயல வேண்டும். எனக்கு ஒரு உண்மை தெரியும்; இலேயனைக் கொல்வது என்பது அவன் மகனே என்று சொல்லப் பட்டது. இலேயனுக்கும் எனக்கும் பிறந்த பிள்ளையே கொல்வான் என்பது அச்சொல். அது உண்மையாக முடிந்ததா? இலேயன் யாரோ வழிப்பறிக்காரனால், முச்சந்தியில் கொல்லப்பெற்றான் என்பது அனைவரும் அறிந்தது. எங்களுக்குப் பிறந்த குழந்தையோ, அது பிறந்த மூன்றாம் நாளே தனையிடப்பெற்று மலைப்பக்கத்தே விட்டெறியப் பெற்றது. எனவே அது இறந்திருக்கும். பின் எவ்வாறு மகன் தந்தையைக் கொல்வது? அஞ்சியவாறு, மகன் தந்தையைக் கொல்லவில்லை என்பது தெரிந்ததே. இவ்வாறு வரும்பொருள் உரைப்பது என்பது பொருளற்றதாகி விட்டது. எனவே இப் புலவன் பேச்சுக்கு ஏன் செவி சாய்க்கவேண்டும்? கடவுளின் அருள் போகப்போகத் தான் தெரியும்.

ஒதிபன்: என் கண்மணி! நீ சொல்வது எனக்குப் பின்னும் மயக்கத்தையே கொடுக்கிறது. உன் உள்ளம் எதையோ நாடிட....

யோகத் : ஏன் உங்கள் முகம் மாறுபட்டிருக்கிறது? என்ன நினைந்து நிற்கிறீர்கள்?

ஒதிபன் : இலேயன் முக்கூட்டான ஓரிடத்தில் கொல்லப் பெற்றான் என்று நீ சொல்லவில்லையா?

யோகத் : அவ்வாறுதான் கொல்லப்பெற்றது.

ஒதிபன் : அவ்விடம் எங்கே! எந்த நாட்டில்?

யோகத் : அந்த இடம் பொகியம் என்றார்கள். அங்கே வழி பிரிகிறது. ஒன்று தெலுவிக்குச் செல்கிறது. மற்றொன்று தாலியத்திற்குப் போகிறது.

ஒதிபன் : எப்போது நடந்தது?

யோகத் : உன் அரசுக்குமுன் நடந்தது.

ஒதிபன் : கடவுளே, எனக்கு என்ன தீங்கு செய்யப்போகிறாய்!

யோகத் : ஒதிபரே, உங்கள் மனத்தில் என்ன நினைந்து வருந்துகிறீர்கள்? ஏன் இந்தக் கலக்கம்?

ஒதிபன் : ஆ, அதைக் கேளாதே! இலேயன் எவ்வாறு இருந்தான்? எத்தனை வயது?

யோகத் : நெடிய உரு வெள்ளை முடிட உம்மைப் போன்ற உருதான்.

ஒதிபன் : ஆ, கொடுமை! எனக்கே அப்பழி.

யோகத் : அரசே, எனக்குப் பயமாக இருக்கிறது. என்ன நேர்ந்தது?

ஒதிபன் : அக் குருட்டுப் புலவனுக்குக் கண்தெரியுமோ? இன்னும் ஒன்று சொல்.

யோகத் : எனக்குத் தெரிந்தவை யெல்லாவற்றையும் சொல்லுகிறேன். கேளுங்கள்.

ஒதிபன் : அரசர் பரிவாரங்களுடன் சென்றாரா? ஒருசிலருடனா? அன்றித் தகுந்த மெய்க்காவலருடனா?

யோகத் : கொன்றவர்கள் ஐந்துபேர். அவர்களுக்குமுன் வெற்றியுரைப்போன். ஒரு தேர்தான். அதில்தான் அரசரிருந்தார்.

ஒதிபன் : நன்கு விளக்கமாகிறது. ஆ, உனக்கிவையெல்லாம் கூறியது யார்?

யோகத் : ஒரு வேலையாள். அவன் ஒருவன்தான் தப்பித்து வந்தவன்.

ஓதிபன் : இப்போதும் அவன் இங்குள்ளானா?

யோகத் ; இல்லை; அவன் திரும்பிவந்து தன் அரசர் இருந்த இடத்தில் தங்களைக் கண்டபோது, தன்னை விடுவித்து அனுப்பிவிடுமாறு மிகவும் வணங்கிக் கேட்டுக்கொண்டான். ஆடுமேய்த்து நாட்டுப்புறத்தில் இருக்க விரும்புவதாகக் கூறினான். நானும் செல்லுமாறு விடுத்தேன். ஏழை வேறு நல்ல வெகுமதியைக் கேட்டிருக்கலாம். அவன் இருந்த வரையில் மிகவும் நல்லவனாகவே இருந்தான்!

ஓதிபன் : அவனை மிக விரைவில் வருவிக்கக் கூடுமா?

யோகத் : முடியும். ஏன் கேட்கிறீர்கள்?

ஓதிபன் : மனைவி சொல்லவேண்டுவனவற்றிற்கு மேலாக நடந்துவிட்டது. எனவே அவனைப் பார்த்தாக வேண்டும்.

யோகத் : நல்லது; நாம் அவனை வரவழைத்துப் பேசலாம். அது கிடக்க தங்கள் மனத்தை உறுத்துவதுதான் என்ன என்று தங்களைக் கேட்டறியலாமா?

ஓதிபன் : நான் நினைத்தவாறு, நடப்புகள் இருந்தனவாயின் நான் சொல்லவேண்டுவனவற்றை உனக்குத்தான் முதலில் சொல்லவேண்டும். கேள்.

என் தந்தை கொரிந்தியன். பொலிவன்என்னும் பேரினன். என் தாய் தோரியள் ; மிரோப்பி என்பாள். இல்லத்தில் மற்றவர்களைப் போலல்லாது மிக மேலானவனாக விளங்கினேன். ஒருநாள் வேற்று மனிதனோடு உணவருந்தினோம். அவன் குடித்துவிட்டிருந்தான். என்னை அவன் முறைத்துப் பார்த்து என்னை என் தந்தையின் மகனல்லன் என்று கூறினான். அது என் மனத்தை உறுத்தியது. எனினும் மன அமைதியுடன் இருந்தேன். மறு நாள் என் பெற்றோர்களிடம் சென்று உண்மையைக் கூறுமாறு கேட்டேன். அவர்கள் என்னைப்பற்றி எவரேனும் ஏதேனும் கூறினால் தண்டிப்பதாகச் சொல்லி வருந்தினர். அது எனக்கு ஆறுதலளித்தது. எனினும் அவ்வழக்கு ஒரு சிலரால் வெளிவரலாயிற்று. அதன் உண்மையை அறியவேண்டியவனாய் பைதோவிடம் சென்று கேட்டேன். கிடைத்த விடையோ நேர் விடையாக அன்றிச் சோகக் கதையாக உருக் கொடுத்தது. என் தாயினை மணப்பேனென்றும்

உறவுமுறை தவறிய மக்களைப் பெறுவேனென்றும் கதை கிடைத்தது. கேட்ட நான் வருந்தி அவ்வாறு நேரா வண்ணம் பெற்றோர்களை நீங்கி மறைந்தோடி வந்தேன். என் வழிப்பயணத்தில்தான் மறைந்த அரசர் தம் முடிவை எய்தினர். இன்னுங்கேள்.

நான் முக்கூடான ஓரிடத்திற்கு வந்தபோது கட்டியங் கூறிக் கொண்டு ஒருத்தன் வர, பின்னல் குதிரையினல் இழுக்கப்பட்ட வண்டி யொன்று தொடர்ந்து வண்டியில் நீ விளக்கியவர் உட்கார்ந்திருந்தார். கட்டியங்காரன் முரட்டுத்தனமாய் வழியை விட்டு விலகக் கட்டளை யிட்டான். அம் மதிப்புக்குரிய தலைவனும் அம் முரடனும் கூடிக் கட்டளையிட்டார். வண்டியோட்டி என்னை அடித் துத் தள்ளினன். நான் வெகுண்டெழுந்தேன். யான் அப்பெரிய ஆளைத் தாண்டிச் செல்லும் போது, அவன் வண்டியோட்டியின் சாட்டையினல் என் தலையைப் பார்த்து அடித்தான். வண்டியில் சாய்ந்து என்னை அடித்ததற்குப் பலன் உடனே கிட்டிற்று. வண்டி லிருந்து கீழே விழுந்து விட்டான். அங்கிருந்த எல்லே ரையும் நான் கொன்றேன். ஆயின், இப்போதே இலேயன் இப்புதியன் நரம்பில் ஓடுவதாயின் தெய்வமும் மனிதனும் வெறுக்கத் தக்கவன், என்னிலும் உளரு? என்னை எந்த நகரத்தானும் வீட்டுக்குள் இருக்க விடுதல் கூடாது. எனக்கு நானே விதித்துக் கொண்ட பழிக்கு யானே துன்புற வேண்டும். அவனைக் கொன்றவன் அவன் மனையைத் தொடலாகுமா? எனக்கு இப்பாவமேன்? என் தாயை மணந்து, தந்தையைக் கொன்று...... எனக்கு இவ்வாறு கொடுமையினை இழைத்து விட்ட தெய்வமும் கொடுந்தெய்வமாக இருக்குமோ? யான் வாழ்வதினும் வீழ்வது மேல். இப்பழிக்கு நான் எவ்வாறு ஆளாவது?

கோரஸ்: ஐய, நீங்கள் சொல்வன கொடுஞ் சொற்கள்; உண்மையை யறியும் வகையில் நம்பிக்கையுடன் இருங்கள்.

ஒதிபன்: ஆட்டிடையன் வருமளவும் நம்பிக்கையுடன் இருப் பதுதான் செய்யத்தக்கது.

யோகத்: எவ்வுதவியை அவனிடமிருந்து எதிர்பார்க்கிறீர்கள்?

ஒதிபன்: அவன் சொல்லுவதும், நீ சொல்லியதும் ஒத்துள்ள தாயின் நான் தீங்கற்றவன் ஆவேன்.

யோகத்: எந்த முறையில்? நான்சொல்லியதென்ன?

ஒதிபன் : அவன், முரட்டு வழிப்பறிக் காரர்கள் கொன்றனர் என்றான் அன்றோ. அவன் இப்போதும் வழிப்பறிக் காரர்கள் என்றானாயின் யானல்ல அரசனைக் கொன்றவன். ஒருவன் பல வழிப்பறிக்காரர்கள் ஆவதெங்ஙனம்? அன்றி வழியே வந்த ஒருவன் என்றால், தப்ப வழியே வந்த ஒருவன் என்றால், தப்ப வழியில்லை. பழியூட்டும் விரல் என்னைச் சுட்டிக் காட்டுகிறது.

யோகஸ் : ஆம், அதுதான் அவன் சொல்லியது. அவன் மறுத்துச் சொல்லமாட்டான்—இந்நேரம் முழுவதும் அவன் சொல்லியது தெரியும், நான் மட்டுமல்ல. அப்படித்தான் அவன சிறுசிறு மாறுதல்களுடன் உரைத்தாலும் முன் சொல்லியவாறு இலேயர் இறந்தது பற்றிய செய்தியில் மாற்றம் இராது. லோக்சியாசு சொல்லியது என் பிள்ளையே அவரைக் கொல்லும் என்பது. அவர் இறந்தது அவ்வாறல்லவே! என் குழந்தை அப்பொழுதே இறந்து விட்டது. வருவதுரைப்பது என்பது வெறும் பேச்சுத் தான்! இந்த மரணத்திற்குப் பின் இவ்வாறான பேச்சின் வழக்கே போவதில்லை.

ஒதிபன் : நீ சொல்லியது சரியே. உள்ளே செல்வோம். நீ சொல்வது போலவே ஆகட்டும்.

[செல்கிறார்கள்]

கோரஸ்: சொல்தனிலும் செயல்தனிலும் தூயவனா இருப்பதற்கே
நல்லறத்தின் வழுவாது நான்வாழ விரும்புவனே
சொல்லுகின்ற தற்பெருமை சோர்வளிக்குங் கொடுங்கோலற்
கில்லை யினி மலர்வாழ்வும் இழிந்து கடையவனாவான்-
உண்மைநெறி தவறியவன் உறுவானோ பொருவாழ்வும்
திண்ணமிது வழிதவறி செம்மாந்தர் விழுவதுமே
பண்ணுபிழை தெய்வதமும் பார்க்காதோ பழிபோமோ
விண்ணவர்தம் வருமொழியும் வீணாமோ உணர்ந்திடிலே
சீயவுன தருளுள்ளம் சீராயின் எழுந்தருள்க
ஆயுமுறை பழுதாகி அப்பலன்பேர் அழிபட்டுத்
தீயுமொரு நிலையுறவும் தெய்வத்தின் பெருமையுமே
ஓயவுன தருளுள்ளம் ஒப்புவதோ எழுந்தருளே.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) **கட்டாய இந்தி பற்றி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கருத்து :**

“இந்தி பேசப்படாத பகுதிவாழ் மக்கள்மீது இந்தியைத் திணிக்கக் கூடாது. அப் பகுதி மக்களின் உடன்பாடு பெற்றே அரசாங்க அலுவல் களுக்கு இந்தியைக் கொண்டுவர வேண்டும், என்று முதன்மை அமைச்சர் கொடுத்திருக்கும் வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டும்.

“இந்தி எண்களை நடைமுறைக்குக் கொண்டுவர இந்தி வெறிகொண் டோர் கட்டாயப்படுத்துகின்றனர். வடஇந்தியாவில் மைல் கற்களில் இந்தி எண்கள் பொறிக்கப்படுவதாலும், வழிகாட்டிகள் இந்தியில் எழுதப்படுவதாலும் தென்னிந்தியர்களுக்கு மிகுந்த இடர்ப்பாடு ஏற்படு கிறது. இங்கு நாம் மூன்றுமொழிகளைக் கற்கிறோம். மேலும் இந்தி எண்களையும் கற்க இயலாது. இதை நாம் ஒரு யோசனையாகக் கூற வில்லை. வற்புறுத்திக் கூறுகிறோம். அறிவியல் கலாச்சார சொற்கள் சம்பந்தமாக அனைத்து நாட்டு மொழிகளை நாம் ஏற்கவேண்டும்.” என்று கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 3-2-60 இல் தியா ராயநகர் இந்திபிரசார சபையில் அனைத்திந்திய இந்தி ஆசிரியர்க கருத்தரங்கைத் துவக்கி வைத்தகாலை பேசியுள்ளார்கள்.

குறிப்பு : கட்டாய இந்தித் திணிப்பைக் கண்டித்தும், தமிழகத் தார்க்கு இந்தியால் விளையும் இடர்ப்பாடுகளை வடநாட்டார்க்கு அறிவுறுத்தியும் பேசிய அமைச்சரவர்களைப் பாராட்டுகிறோம்

(உ) இந்தி மொழி ஆதிக்கம் பற்றி திரு. ஸ்ரீ பிரகாசா கருத்துரை:

“இந்தி பேசாத மக்களுக்கு இந்தி கற்பதிலுள்ள இடர்ப்பாடுகள் நமக்குத் தெரியும். தென்னாட்டினர் இந்தி தங்கள்மீது திணிக்கப்படு வதாகக் கருதுகின்றனர். இந்த அச்சத்தைப் போக்கவேண்டுவது இந்தி பேசும் மக்கள் கடமை. இந்தி பேசும் மக்கள் தென்னிந்திய மொழிகள் சிலவற்றைக் கற்கவேண்டும். 14 மொழிகள் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே எந்த ஒரு மொழிக்கும் தனிச் சலுகை கிடையாது. இந்தியைப் பரப்பும் முறையில் காந்தியடிகளின் அன்பு நெறியைக் கடைப்பிடித்தல் வேண்டும்” என்று பம்பாய் ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் 2-2-60இல் பம்பாயில் நடை பெற்ற ராஷ்டிரபாஷா பிரசார சபை பட்டமளிப்பு விழாவில் பேசிய காலை குறிப்பிட்டார்கள்.

குறிப்பு : இந்திமொழி ஆதிக்கம்பற்றித் திரு ஸ்ரீபிரகாசா அவர்கள் தந்திருக்கும் கருத்துரை வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதுமாகும். மைய அரசினர் இக்கருத்துரையைக் கேட்டுத் தென்னாட்டார் அச்சத்தைப் போக்க முயல்வார்களாக.

(ங) **அஞ்சற்றலைகளில் திருவள்ளுவர்**

இவ்வாண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாளில் வெளிவரும் 15 புதுக்காசுகள் மதிப்புள்ள அஞ்சற்றலைகளில் திருவள்ளுவர் படத் தைப் பொறிப்பது என இந்திய அரசின் அஞ்சல் - கம்பிச் செய்தித் துறைகளின் பகுதி வாயிலாக ஒரு செய்தி வெளி வந்துள்ளது.

குறிப்பு: இச்செய்தி தமிழர்கட்கு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகும். நெடுநாட்களாகப் பல தமிழ்ப் பெருமக்கள் வள்ளுவரின் திருவுருவம் அஞ்சற்றலைகளில் இடம்பெற வேண்டுமென விழைந்தனர். அதனை நிறைவேற்றித் தந்த இந்திய அரசினரைப் பாராட்டுகின்றோம். இதுபோல் வேறு பல தமிழ்நாட்டுப் பெருமக்களின் உருவங்களையும் பொறித்தல் நன்று.

(௪) சமக்கிருதமே நாட்டு மொழியாதற் குரியதாம்!

"சமக்கிருதத்தின் பழஞ் சிறப்பை மீட்க வேண்டும். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சமக்கிருதம் நாட்டின் பொது மொழியாக இருந்து வந்திருக்கிறது. இந்திய ஒருமைக்கு அஃது உதவி வந்துள்ளது. பிற மொழிகளைவிட வட்டாரமொழிகளை வளர்ப்பதில் பெரும் அளவில் அஃது உதவியிருப்பதே அதன் பெருமைக்குக் காரணம். சமக்கிருத மொழியைத் தேசீய மொழியாகச் செய்திருந்தால் மொழிபற்றிய பூசல்கள் ஏற்பட்டிரா."

என்று கடந்த திங்கள் இறுதியில் திருப்புனித்துறை என்னுமிடத்தில் நடைபெற்ற சமக்கிருத அறிஞர் கழகக் கூட்டத்தில் பேசிய காலை திரு. எம். பதஞ்சலி சாத்திரியாரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிப்பு: திரு. சாத்திரியாரவர்களின் கருத்து சமக்கிருதத்தின் பால் அவர் கொண்டுள்ள பற்றினையே காட்டுகிறது. ஆனால், அம்மொழிக்கு அவர் ஏற்றும் சிறப்புக்கள் எத்துணையும் பொருந்தாதவையாகும். சமக்கிருதம் வழக்கொழிந்து நிற்றலே இதற்குப் போதிய சான்றாகும். எனவே, நாட்டுப் பொது மொழியாதற்கு அம்மொழி ஏற்றது என்ற கூற்றும் பொருந்தா தொழியும். மேலும் சமக்கிருதமே பிறமொழிகளின் வளர்ச்சிக்கு வழிகோலிற்று என்பதும் பொருந்தாக் கூற்றே. அதற்கு மாறாகத் திராவிட மொழிகளைப் போன்ற வளமிக்க பண்டை மொழிகளின் வளத்தை அது சீரழித்தது என்றுரைத்தலே சாலப் பொருந்துவதாகும்.

(௫) உருசியக் குடியரசுத் தலைவர் வருகை

உருசியக் குடியரசுத் தலைவர் தளபதி ஒரோசிலோவ் 20—1—60 அன்று இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். புது தில்லியில் இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரப்பிரசாத், தலைமை அமைச்சர் நேரு ஆகிய இருவரும் திரு. ஒரோசிலோவைச் சிறப்பான முறையில் வரவேற்றனர். திரு ஒரோசிலோவ் 31-1-60 இல் சென்னைக்கு வருகை தந்தார். சென்னை மக்கள் சார்பில் நகராண்மைக் கழகம் அவருக்கு வரவேற்பளித்தது. கடற்கரையில் நடைபெற்ற மாபெருங் கூட்டத்தில் அவர் பேசினார். மறுநாள் கல்கத்தா சென்றார். இங்ஙனம் இந்தியாவின் முதன்மையான நகரங்களைப் பார்வையிட்டபின் அவர் தம் நாடு திரும்பினார்.

குறிப்பு: இங்ஙனம் பிறநாட்டுத் தலைவர்கள் நம் நாட்டிற்கு வருதலும், நம் நாட்டுத் தலைவர்கள் பிறநாடுகட்குச் செல்வதும் உலக ஒற்றுமைக்கும் அமைதிக்கும் வழி கோலுவதாகும். அவ்வகையில் திரு. ஒரோசிலோவ் அவர்கட்குத் தமிழகத்தின் வரவேற்பும் வாழ்த்தும் உரித்தாகட்டும்.

(சு) ஆந்திரரின் மொழிப்பற்று

ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. டி. சஞ்சீவய்யா அவர்கள் கடந்த 28-1-60 இல் பதவி ஏற்ற காலைச் செய்தி எழுத்தர்களிடம் பேசுகையில் ஆந்திர மாநிலத்தில் ஆந்திர மொழியையே பொது மொழியாக அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப் போவதாகவும், முதற்படியாகச் சில இலாகாக்களில் அதனை நடைமுறைக்குக் கொண்டுவரப் போவதாகவும் அதற்கு வேண்டிய ஆட்சிச் சொற்களை அமைக்க ஒரு குழு ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பு: பதவி ஏற்றதும் முதல் வேலையாகத் தாய்மொழி வளர்ச்சியிலும் ஆக்கத்திலும் நாட்டம் செலுத்தும் ஆந்திர முதலமைச்சரவர்களைப் பாராட்டுகிறோம். தமிழகம் இத்துறையில் முன்னரே பணியாற்றத் தொடங்கியுள்ளதறிவீர்கள்.

(எ) சகாரா: 6,000 ஆண்டுகட்கு முன்!

அண்மையில் கிழக்குச் சகாராப்பாலைவனத்துக்குச் சென்று திரும்பிய பிரஞ்சு விஞ்ஞான ஆய்வுக் குழுவினர், உலகிலேயே மிகப் பெரிய பாலைவனமாகத் திகழும் சகாராவின் நடுப் பகுதியில் ஆறாயிரம் ஆண்டுகட்குமுன் நாகரிகம் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக அறிவித்துள்ளனர்.

இன்று உலகில் பாழ்நிலமாகக் கிடக்கும் அப்பகுதியில் அக்காலத்தில் பெரிய ஆறுகளும் ஏரிகளும் இருந்தனவென்று இக்குழுவினர் கருதுகின்றனர். இவர்கள் கடந்த இரண்டு திங்களில் அப்பகுதியில் 3,085 கல் இங்குமங்குமாக அலைந்து திரிந்து இவ்வுண்மையினைக் கண்டறிந்துள்ளனர். இப்பணியில் ஈடுபட்டோர் 45 பேர். இவர்களுக்குத் துணையாக 14 பாரவண்டிகள் (லாரிகள்) ஹெலிகாப்டர் என்னும் ஒரு வகை விண்ணூர்தி முதலியன இருந்தனவாம்.

வித்துவான், திரு. மு. இராகவையங்கார் அவர்களின் மறைவு

இவர், செந்தமிழ் நாட்டின் பழம்பெரும் புலவர் குழுவினுள் சிறந்தோருள் வைத்தெண்ணப்பட்ட சீரியோராவர். இராமநாதபுரம் வேத்தவைப்புலவராக விளங்கிய வித்துவான் ரா. இராகவையங்காரவர்களின் மைத்துனக் கேண்மையராவர். மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறை முதலிய பல தொண்டுகளில் தலைமையும் புலமையுந் திகழப் பணியாற்றியவர். பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுதவிய ஆன்றோர். நடுநிலைவழாது சேக்கிழார் காலம் கம்பர் காலத்துக்கு முந்தியதெனக் கட்டுரை தந்த கவிஞர். தெய்வத்தெளிவினர். இப் பெருந்தகையார் மாணா மதுரையில் 2-2-60 இல் தம் வளமனையில் காலமான செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். அன்னாருக்கு அகவை 82. அன்னவரின் குடும்பத்தாருக்குக் கழகத்தாரின் பரிவும் ஆறுதலுரையும் உரியவாகுக.

மதிப்புரை

''வைணஷ்வி சந்நிதிமுறை'' தொகுதி 2.

[பதிப்பாளர்: சன்மார்க்க சங்கத்தார் (வைஷ்ணவி ஆலயம், திருமுல்லைவாயில், ஆவடி வழி) ஆவர். விலை ரூபா 3-00]

இந்நூல் உலகெலாம் தந்திருவுள்ளத் திருக்குறிப்பினால் ஆக்கி, அளித், தழித்து, நோக்கி, நுண்ணருள் புரிந்து இடையறாது நின்று என்றுங் காக்கும் திருவருளன்னையாம் வைஷ்ணவியைப் பற்றிய வழி பாட்டு அருட்பனுவலாகும். இப்பனுவலின் மாண்பு 'காமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரசுவதி' அவர்கள் உளங்கனிந்தளித்தருளிய ஒப்புயர்வில்லா வாழ்த்து மொழியால் குன்றிலிட்ட விளக்கென்ன நின்று பொலிகின்றது. ஆலய அமைப்பு முதலிய பல அழகிய படங்கள் காணப்படுகின்றன.

''வைணவி ஆலய விநாயகர்துதி'' முதல் ''வைஷ்ணவி சக்தி விளக்கம்'' ஈறாக முப்பது பெருந் தலைப்புக்களால் யாக்கப்பட்டுள்ளது. பல உட்டலைப்புக்களும் உள்ளன. எல்லாவகையான சித்திர கவிகளும் அழகுற அமையப் பெற்றுள்ளன. இவை இக்காலத்துத் திறலுடையோர் பலரால் பாடப்பெறும் அருமை வாய்ந்தன. மொத்தம் 545 அரும் பாடல்களைக் கொண்டு திகழ்கின்றது. இது 'வைஷ்ணவி தத்துவம்' என்னும் விளக்கத்தில் வைஷ்ணவி மந்திரத்தே எல்லா மந்திரங்களும் அடங்கியுள்ள உண்மை விளக்கப்பட்டுள்ளது. மேலும் பாக்கள் சந்தப்பா, பாவும் பாவினமும் பொருந்தியுள்ளன. ''எம்பாவை பள்ளி யெழுச்சி, அந்தாதி, எண் ணெழுத்துமாலை'' முதலிய பல வேறு பாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. திருவருள் கைவந்த நல்லாரும், பொருவரும் புலவர்களும் ஒருங்கிய மனத்துடன் பாடிய கனிவுப் பாடல்க ளாகும். இவற்றுள் பெயர் காணப்படாத பேரன்பர்களின் திருப் பெயரை அடுத்த பதிப்பிலேனும் வெளிப்படுத்துவார்களென நம்பு கின்றோம். செய்யுட்களுக்குக் குறிப்புரை, கருத்துரை முதலியன செவ்வையாக அமைந்துள்ளன. தெளிவும், எளிமையும், இனிமையும் பொருந்திய ஆற்றொழுக்கு நடையன.

பாழ்ங்கோள் பெருகிவருமிக்காலத்து வாழ்வளிக்கும் இத்தகைய நூல் பல வெளிவருதல் இன்றியமையாததாகும். அது வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாகும். இவ்வரும் பெரும் நூலினைப் பொது வாகச் செந்நெறிச் செல்வர்களும் சிறப்பாக அம்மை வழிபாட்டுச் செம்மையாளர்களும் நாளும் ஓதி நாற்பொரு ளெய்தி இன்புறுவார் களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.